


மஹ்மூட் தர்வீஷ்



நிலார் என். காசிம்



சோகங்கள் பயணிக்கின்றன...

# படிகள் ௨௦

ISSN 1800 - 4598

30/-




கட்டிடப் பொருட்கள், தளபாடங்கள், உலோகங்கள்
போன்றவற்றை ஏற்றி இறக்குவதற்கு
ஏற்ற வாகன வசதிகளுக்கு

Contact - Mr. Thalin
**Marthankadawela.**
**0776562344**

Distributers of Holcim Cement, Building Materials & Suppliers

# NORTH AGENCY



**169, Market Site, Anuradhapura.**
**Tel - 0252221772**



உங்கள் இல்லத்திற்கு தேவையான
மின் உபகரணங்கள், கேஸ்குகர்ஸ்,
அன்பளிப்பு பொருட்கள், வாசனைத்திரவியங்கள்,
சமையல் உபகரணங்கள்,
பிளாஸ்டிக் தண்ணீர் பில்டர்கள்,
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள
நம்பிக்கை நிறைந்த இடம். இன்றே நாடுங்கள்

# SHAFNAS TRADE CENTER



**சப்னாஸ் ட்ரேட் சென்டர்**

14, New Shopping Complex
Market Site, Anuradhapura.
Tel - 025 2235251, 0777231232, 0776139013

க. பரணிதரன்
2008-11-06
K. Bharaneetharan
EDITOR
'JEEVANATHY'
KALAI AHAM
ALVAI (N.P)

நல்லன காணவும்
நல்லவற்றோடு
இணையவும்
முயல்பவர்களின்
எண்ணிக்கை
சிறியதாக இருப்பினும்
முயற்சியின்மையிலும்
பார்க்க
அது மேலானது

படிகள் இதழ்களைத் தொடர்ந்து பெற விரும்பும் இலக்கிய ஆர்வலர்கள், தங்களது சந்தாக்களை பதிவு செய்வதன் மூலம் இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

**படிகள் கிடைக்கும் இடங்கள்**

பூபாலசிங்கம் புத்தக நிலையம் (கொழும்பு)
சேமமடு பொத்தகசாலை (கொழும்பு)
பாம்லீப் புத்தக நிலையம் (கொழும்பு)
தமிழ்ச் சங்கம் (தென்கிழக்குப்பல்கலைக்கழகம்)
ரெஸ் மார்ட் (அநுராதபுரம்)
நெட் ஹவுஸ் (அநுராதபுரம்)
ஹிமாஸ் புத்தக நிலையம் (இக்கிரிகொல்லாவ)

**புதிய படைப்புக்களையும், விமரிசனங்களையும் எதிர்பார்க்கிறோம்**

ஆக்கங்கள் ஆக்கியோனுக்கே

# படிகள்

இருமாத இலக்கிய இதழ்

ஒக்டோபர் - 2008

ISSN 1800 - 4598
VOLUME : 04 . NO: 04

-வெளியீடு-
நண்பர்கள் இலக்கிய குழு
அநுராதபுரம்
நட்சத்திர நற்பணி மன்றம்.

தனிப் பிரதி - 30.00
தபால் மூலம் - 40.00
வருடச் சந்தா - 150.00
வெளிநாடு - 2$, 1பவுன்

காசுக்கட்டளை, காசோலை அனுப்பவேண்டிய முகவரி

JMF. Saman
102, Yasasiripura,
Anuradhapura.
(Anuradhapura Post Office.)
+9471 3036151

ஏனைய தொடர்புகளுக்கு
The Editor
"PADIHAL"
78B, Jayanthi Mawatha
Anuradhapura # 50000
+94 713565219
+94 726155244
Padihal@yahoo.com
www.padihal.blogspot.com

## உங்கள் பார்வைக்கு எங்கள் கருத்து

ஜனநாயகத்தின் பிரதான குறியீடாக தேர்தல்கள் திகழ்கின்றன.

மக்கள் காலனித்துவ அதிகாரத்தின் பிடியிலிருந்து ஜனநாயகத்தை விடுவித்தது: தமது உரிமைகளையும், சுதந்திரங்களையும் மகிழ்ச்சியாக அநுபவிப்பதற்காகும். இந்த ஜனநாயக அரசியலை மக்கள் அடைந்து கொள்வதற்கு வரலாற்று ரீதியிலான பல்வேறு கஷ்டங்களை அநுபவித்தே வந்துள்ளனர்.

இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் வரலாற்றை கற்கும் எந்த ஒரு மாணவன் அல்லது ஒரு படிப்பாளன் இந்த வரலாற்று உண்மைகளை நன்கு அறிவான்.

போராட்டங்கள், உயிர்த்தியாகங்கள், அழிவுகள் என்பனவற்றின் கடூர வலியின் பிற்பாடே இன்றைய ஜனநாகம் பிறந்து முகிழ்ந்துள்ளது.

இருப்பினும், இன்று இலங்கையில் ஜனநாயகம் மெல்ல மெல்ல மரணித்து வருகிறது என்பதனை கவலையுடன் குறிப்பிடவேண்டும். இனத்துவ ஆதிக்கம் மலிந்து வருகின்றது. அரசியல் தலைமைகள் மக்களை நாடிச்சென்று மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றிய காலங்கள் காலாவதியாகிவிட்டன. மாறாக அரசியல் தலைமைகளை மக்கள் நாடிச்சென்று தங்களது அபிலாசைகளை நிறைவேற்ற விரதம் இருக்கும் துரதிஷ்டம் நிகழ்கின்றது.

மேலும் மக்கள் தங்களது கருத்துக்களை வெளியிடவும், அபிலாசைகளை வெளியிடவும் சுதந்திரமான முறையில் வாழவும் முடியாத ஒரு துரதிஷ்ட சூழல் நமது நாட்டில் அதிகரித்து வருகிறது. எனவே மக்கள் விழிப்பாக இருக்க வேண்டிய காலம் கவிந்துள்ளது.

எனவே விழிப்புடன் இருக்க எத்தனிப்போம்

**- ஆசிரியர்**


# படிகள்

இருமாத இலக்கிய இதழ்

ஒக்டோபர் - 2008

இதழ் 20

**ஆசிரியர்**
எல்.வஸீம் அக்ரம்

**உதவி ஆசிரியர்கள்**
எம்.சீ.நஜிமுதீன்
அநுராதபுரம் சமான்

**சஞ்சிகைக் குழு**
ஞானச்சந்திர குருக்கள்
நாச்சியாதீவு பர்வீன்
எம்.சி. ரஸ்மின்

**வெளியீட்டுக் குழு**
எம்.ஐ.எம்.பிர்னாஸ்
எஸ்.எம்.பாரீஸ்
எஸ்.ஏ.சதாத்
யு.எம்.ஹிமாஸ்
எம்.ஜே.எம்.ரிஸாதி
ஏ.எச்.எம். ஸப்ராஸ்

**ஓவியம்**
அன்பு அமீன்
ஸீஹ்னாஸ்

# அநுராதபுர மாவட்ட இலக்கியங்களின் உள்ளடக்கம்

02

முக்கிரியாவ எம். றசீம்

## 3:2 வர்க்க முரண்பாடுகள்

பொருளாதாரத்தின் அடிநாதமாகவே வர்க்கமுரண்பாடுகள் சமுதாயத்தில் தோற்றம் பெறுகின்றன. இங்கு வர்க்க முரண்பாடுகள் என்று குறிப்பிடுமிடத்து, தொழிற் துறையில் முதலாளிகள் எனத்தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட மக்கள், தமக்குக் கீழ் பணி புரியும் தொழிலாளர் வர்க்கத்தினைச் சுரண்டி, அதன் மூலம் தொழிலாளர் வர்க்கத்தின் மேம்பாட்டினை எவ்வாறு புஷ்வாண்மாக்குகின்றனர் என்பதை அடியொட்டியதாக அமைகின்றது.

அநுராதபுரப் பிரதேசம் பண்டைய மன்னர் காலத்திலிருந்து விவசாயத்துறையில் மேம்பட்டு வரும் ஒரு பிரதேசமாகும். இப்பிரதேச மக்களிற் பெரும்பான்மையானவர்கள் விவசாயத் துறையில் ஈடுபட, அதற்கும் வழியில்லாத மக்கள் சலவைத் தொழில் போன்ற இன்னோரன்ன வேலைகளைச் செய்து தமது வாழ்க்கையைப் போக்கி வருகின்றனர்.

இவ்வாறு தமது வாழ்நாளைக் கழித்து வருகின்ற தொழிலாளர் வர்க்கத்தினர், முதலாளி வர்க்கத்தினரால் அன்று போலவே இன்றும் நசுக்கப்பட்டு வருகின்றனர்.

அநுராதபுரத்தில் காணப்படும் இத்தகைய சூழ்நிலைகளைக் கருவாகக் கொண்டு இலக்கியம் படைத்தவர்களில் அநு.வை. நாகராஜன் சிறப்பிடம் பெறுகின்றார். சுமார் 30 வருடங்களுக்கு மேலாக இம்மண்ணில் வாழ்ந்த இவர், இப்பிரதேசத்து மக்களின் வாழ்வியற் பிரச்சினைகளைக் கருவாகக் கொண்டு இலக்கியம் படைத்தார் என்பதை அவருடைய பின்வரும் கூற்று தெளிவுபடுத்துகின்றது.

"........யான், 1950 களில் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைத்தேன். அன்றைய என் எழுத்துக்கள் யாவும் சிறுகதைகளைச் சுற்றியே இருந்தன.

அவற்றில் வர்க்க முரண் பாடுகள், சாதியக் கொடுமைகள் என்பவற்றோடு பொதுவாக சமூகத்தினதும் தனி மனிதனதும் மன அவலங்கள் பற்றியே என் கதைக் கருக்களாக இருந்தன. மேலும், அவை எந்தவொரு அணியையோ அரசியல் பின்னணியையோ சார்ந்து இல்லாமல் தனித்துவமாக நாம் வாழும் மானுட சமூகத்தைப் பகைப்புலமாகக் கொண்டிருந்தன." என்று 'ஒரு காலத்துச் சிறுகதைகள்' தொகுப்பிலுள்ள கதைகள் பற்றிக் கூறுகின்றார்.

1930 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அநுராதபுரப் பிரதேசத்தில் இடம்பெற்று வந்த விவசாயப் பாரம் பரியத்தினதும், பண்டமாற்றுப் பொரு ளாதார முறையினதும் முழு வெளிப் பாட்டினைச் சித்திரிக்கும் வகையில் அமைந்துள்ளது 'சுரண்டலின் நிழல்கள்' என்ற கதை.

தவிரவும், அக்கால அரசியல் நிதர்சனங்களையும் இக்கதை யதார்த் தமாகக் காட்டி நிற்கின்றது. அதில் அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள மன்னர் காலக் குளங்களான கலா வெவ, நாச்சியாதுவ போன்ற குளங் களில் காணப்பட்ட நீர் விநியோக ஒழுங்கு, அதற்கு உபாயமாக முகிழ்ந்த 'யோதஅலை' எனும் இராட்சதக் கால்வாய் போன்றன அடையாளப் படுத்தப் படுகின்றன. அது மாத்திரமன்றி, 1931 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த 'டொனமூர்' அரசியல் திட்டம் மூலமாக நடை முறைக்கு வந்த குடியேற்றத் திட்டமும் அதனால் ஹிதோகம (நெலுபாவ) எனும் கிராமத்தின் பூர்வாங்கமும் தெளிவுபடுத்தப் பட்டுள்ளன.

மாரிமுத்து எனும் ஏழை விவசாயியையும், அனோரிஸ் என்ற கடை வியாபாரியையும் இக்கதையில் ஆசிரியர் உலவ விட்டு, மாரிமுத்து எனும் ஏழை விவசாயியின் ஒரு வருட உழைப்பின் அறுவடையில் எதிர்பார்ப் புக்களும், கனாக்களும் தங்கியிருக்க, முதலாளித்துவ சுரண்டலால் எங்ஙனம் புஷ்வாணமானது என்பதையும் இக் கதையின் ஆசிரியர் தத்ரூபமாக வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"அனோரிஸின் கடன்கள்- வேலை செய்த வேலைக்காரரின் கூலிகள் - சபாபதியாரின் நீண்ட நாள் கடன்கள் - வீட்டுக் கஷ்டம் என்று எல்லாம் களத்து மேட்டை விட்டு வெளியேற முன் மாரிமுத்தைச் சூழ்ந்து கொண்டன.

தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு, சபாபதியாரின் கணக்குக்காக ஐம்பது மூடை நெல்லு போக எஞ்சியதில் அரனோளிஸின் மாட்டு நெல்லும், கடைக்கணக்கால் நெல்லும் அளந்து கொடுத்து விட்டு இருந்த மிச்ச சொச்சத்தில் வேலை செய்தவர் களுக்குக் கூலியாக நெல்லையும் பகிர்ந்து கொடுத்து விட்டு நிமிர்ந்தார், மாரிமுத்தர்.

களத்தில் அவருக்காக பதரும், கந்து களத்துச் சப்பிகளும் அவரைப் பார்த்துப் புன்னகை பூத்தன." அநு.வை. நாகராஜனுடைய கதைகள் யாவும் 1970 களிற்கு முற்பட்ட அநுராதபுரப் பிரதேச மக்களின் வாழ்வியலைக் கருவாகக் கொண்டு படைக்கப்பட்டிருக்கின்றன.

என் வாழ்வில்,
மரணத்தை விடச்
சிறந்த சீர எதுவுமே
இல்லை! நாளை
நள்ளிரவில் அரச
செலவில், அதனை
நான் இலவசமாகக்
கட்டி அணைக்கப்
போகின்றேன்

அந்தவகையில், இககாலப் பகுதியில் சிலர் சலவைத் தொழில் செய்து அதன் மூலம் கிடைக்கும் வருவாயில் சீவியம் நடத்தி வந்தனர். இன்றும் இத்தகைய மக்கள் இப் பிரதேசத்தில் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் இத் தொழிலில் பெண்களே ஈடுபட்டு வந்தனர். அவர்கள் சலவைத் தொழில் முதலாளிமார்களினால் பாலியல் ரீதியாகவும், வேறு விடயங்களினாலும் பாதிக்கப்பட்டார்கள். மேலும் இப் பிரதேசத்தில் சிலர் விலை மாதுக் களாகத் தொழில் செய்தும் சீவியம் நடத்தினர். இன்றும் இவ்வாறான பெண்களை இப்பிரதேசத்தில் காணக் கூடியதாக இருக்கிறது.

மேற்கூறப்பட்ட இரு விடயங்களையும் கருவாகக் கொண்டு அநு.வை. நாகராஜன் இலக்கியம் படைத்திருக்கிறார். அந்தவகையில் குறிப்பிடத்தக்க கதைகளாக 'வினையடி நானுனக்கு', 'அபலையின் கடிதம்', 'ஒரு பிடி மண்' ஆகிய கதைகள் அமைந்துள்ளன.

சலவைத் தொழில் செய்து சீவியம் நடத்தும் பெண்ணின் அவலத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக 'வினையடி நானுனக்கு' என்ற கதை அமைந்துள்ளது. இக்கதையில் வரும் செல்வி என்ற பாத்திரம் வறுமையுடன் கூடவே பிறந்தவளாகப் படைக்கப்பட்டிருக்கின்றாள்.

"செல்வியும் இளமையில் இருந்தே வறுமையில் வாட வேண்டும் எனப் பிறந்தவள். மற்ற ஒடுக்கப் பட்ட மக்களைப் போல்! பணத்தில் முதலிடம் இல்லை. தரத்தில் முதன்மை இல்லை. சமுதாயத்தில் மதிப்பில்லை. மனிதர்களுக்கு முன்னே மனிதன் சரிசமனாக நிற்க முடியவில்லை." செல்வி சலவைக் கூடத்தின் உரிமையாளரான தன் கணவனை அநியாயமாகப் பறிகொடுக்கிறாள். தன் பிள்ளைகள் நால்வரையும் வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற ஓர்மத்துடன் தானே தொழிலாளி ஆகின்ற பாத்திரமாக செல்வி சித்திரிக்கப் பட்டிருக்கின்றாள்.

கணவன் உருவாக்கிய 'லோன்டரியின்' முதலாளியாக மாறிவிட்ட அம்பலத்தின் சேட்டைகளுக்கு இடங்கொடாத மனத் துணிச்சலுடன் தன் தொழிலைச் செய்கின்றாள்.

சலவைத் தொழிலாளர் சிலரின் குடும்பங்களிலே சர்வ சாதாரணமாகக் காணப்படும் ஒரு வழக்கத்தின் படி, அவளுடைய மகள் பொன்னி செய்த ஒரு செயல், 'கையும் மெய்யும்' அகப்பிடிபடவே, அவள் மகளுக்குக் கொடுக்கும் தண்டனை வினையில் முடிவதைக் காட்டுவதே 'வினையடி நானுனக்கு' என்ற கதை தெருவோர மாதுவுக்கு மகளாகப் பிறந்த ஓர் அபலையின் கதையை மிக உருக்கமாகக் காட்டுகின்றது 'அபலையின் கடிதம்'. சமுதாயத்தில் அடித்தட்டு மக்கள் எவ்வாறு அடக்கியொடுக்கப் படுகின்றார்கள் என்பதை இக்கதை தத்ரூபமாக எடுத்துக்காட்டுகின்றது.

"சீழ் வடியும் இந்தச் சமுதாயத்தில் என் போன்ற நடைப்பிணங்கள்-சாலையின் கோடி முனையில் கஞ்சிக்கும் கந்தலுக்கும் நாளும் பொழுதும் மாளும் பஞ்சைகள் இனி வாழ முடியாது. நான் எப்படி வாழ்வேன்? நம்பியிருந்த ஜீவனும், நான் வெளியேறிய அன்றிரவே யாருமற்ற அநாதையாக காலன் கையிற் சிக்கி விட்டதாம். வாழ்க்கையில் அடிப்படை உதவி தானும் இல்லாது உழலும் அநாதைகள். வாழ்வில் சறுக்கி' விட்டால் அவர்களுக்கு இந்தச் சமுதாயம் என்ன விமோசனம் தரும்? வாழ்க்கையில் சறுக்கப் போகின்றவர்களைத் தடுத்து நிறுத்த முடியாத இந்தச் சமுதாயமா, சறுக்கியவர்களைக் காப்பாற்றப் போகிறது? இல்லை, அவர்கள் தான் சுதந்திரமாக வாழ வழிவிடுமா?

என் வாழ்வில், மரணத்தை விடச் சிறந்த சீர் எதுவுமே இல்லை! நாளை நள்ளிரவில் அரச செலவில், அதனை நான் இலவசமாகக் கட்டி அணைக்கப் போகின்றேன்.

**வர்க்க முரண் பாடுகள், சாதியக் கொடுமைகள் என்பவற்றோடு பொதுவாக சமூகத்தினதும் தனி மனிதனதும் மன அவலங்கள் பற்றியே என் கதைக் கருக்களாக இருந்தன.**

இதே பின்னணியில் அமைந்த மற்றுமொரு கதை 'ஒரு பிடி மண்'. இக்கதையும், தெருவோர மகளின் வாழ்க்கை அவலங்களையும், அவள் சமுதாயத் தினால் அடிமைப் படுத்தப்பட்ட நிலையையும் தெளிவு படுத்துவதாக அமைந்துள்ளது.

"எனக்கு விபரம் தெரிந்த காலத்தில் இருந்து இரக்க சிந்தை உள்ளவர்களுடைய இதயம் சோறு கொடுத்தது. தெருவோர மர நிழலும், வீட்டுத் திண்ணைகளும், கடை வாசல்களும் வசிக்க இடம் தந்தன. வீதிகளில் வீசி எறியப்பட்ட சீலைத் துண்டுகள் உடையாகி என் உடலையும் மானத்தையும் மறைத்தன. இவை போதாதா நான் வாழ? நான் பேரழகியாகப் பிறக்க வில்லை. ஆனால், பெண்ணாகப் பிறந்து விட்டேனே? காலம் என்னும் பருவப் பாசியும் என்னைப் பற்றி, மொய்த்துக் கொண்டது. அது பல வீதியோர வாலிபர் களைக் கவர்ந்தது. நானும் இடம் கொடுக்க நேர்ந்தது. முதலில் அருவருப் பாகத்தான் இருந்தது. பணம் வந்ததால் பிறகு, அது பழகிப் போய் விட்டது. எனக்கு வழி காட்டினார்கள் என சகத் தெருவோர நண்பர்கள்."

இவ்வாறு இவருடைய கதை களில் வர்க்க முரண்பாடுகள் பல கோணங்களில் அலசி ஆராயப் பட்டுள்ளமையை நாம் காணலாம்.

*ஆய்வு தொடரும்*

---

### ரணங்களில் வாழ்பவள்...


உணர்வுகளை உருக்குலையவைத்து
சூரியனாய் சுட்டெரிக்கும்
கதிர்வீச்சுப் பார்வையில்
என் இதயத்தின் சிற்பியே...

பாறைக்குள்ளும் ஈரம் கசியும்
இனிய பேச்சுக்ளால்
எனை ஆக்கிரமித்த
சோதனைகளையும், சோகங்களையும்
சோடை இழக்கச்செய்கிறாய்

துருப்பிடித்த இதயத்தை
தூசு தட்டி
உன் மௌன வார்தைகள்
உயிரின் மூச்சுக்கு மூழாமிடும்

என் நிழலில் கசியும்
உன் நினைவின் உதிரம்
உனக்காய் உயில் எழுதும்
என் வாழ்வே
உன் காந்த மொழியில் உன்னுள்
உறங்கிப்போகும்

என்றும் என்னில் புதியப்பட்ட
எச்சங்களாய் உன் கவிதைகள்
என்னில் எஞ்சிப்போனது
ஈற்றில் என் வாழ்வில்
பகிரப்பட்ட ரணங்கள்
இசைக்கும் நினைவுகள்
எனக்கே தோழி ..........



கிரிபாவை நசீஹா

*மேல்* மாடியில் இருந்து அரசாங்க அதிபர் மனோ மேரி கீழே இறங்கி எங்களது கந்தோருக்கு வந்தார். காலையில் 200 பேர் பென்சன் காரரைக் கண்டேன். எங்கே அவ்வளவு பேரும் என்று கேட்டார். எல்லோருக்கும் காசு கொடுத்து அனுப்பி விட்டோம் என்று கூறினோம். வெரிகுட் என்று பாராட்டினார். உங்கள் எல்லாரையும் பாராட்டி பொது முகாமையாளருக்கு எழுதப்போகின்றேன் என்று கூறினார். எல்லாருடைய பெயரையும் கேட்டு எழுதிக்கொண்டு போனார். கொஞ்ச நேரத்தில் மனேஜர் லட்சுமணன் வந்தார். அவரிடம் நடந்ததைக் கூறினோம். அவரும் தானும் அதைத்தான் கூறுவதாக வெகுவாகப் பாராட்டினார். அல்பிறட்டுக்கு பெரிய சந்தோசம். பண்டாரவுக்கும் தென்னக்கோனுக்கும் மகிழ்ச்சி. அவர்கள் இருவரும் உள்ஊர்காரர்கள். நான் இதை இரசிக்கும் நிலையில் இல்லை.

# பெற்ற தாயும்

## நினைவுக் குறிப்புகள்

சி. குமாரலிங்கம்

காலியில் இருந்து இடமாற்றம் கேட்க அநுராதபுரத்தில் கொண்டு வந்து விட்டிருக்கிறார்கள். பொரிந்து தள்ளினேன். என்னை அல்பிரட் சாந்தப்படுத்தினார். குமார் கவலைப்படாதே அடுத்த இடமாற்றம் யாழ்ப்பாணத்திற்குத்தானே என்று கூறினார்.

இன்னும் இரண்டு வருடம் கழிந்தால்தான் யாழ்ப்பாணம் இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்கலாம். கச்சேரியில் நிறையப்பேர் யாழ்ப்பானத்தார் வேலை செய்தார்கள்.

அன்று வெள்ளிக்கிழமை கோச்சி ஒரு மணித்தியாலம் லேட் என்று வந்து சொல்லிவிட்டுப் போனார்கள். அநுராதபுரம் கச்சேரி கட்டிடம் சரியாக யாழ்பாணக் கச்சேரியைப் போன்ற கட்டிட அமைப்பைக்கொண்டது. எங்கள் கந்தோரில் இருந்து பார்த்தால் பெலிஸ்டேசன் தெரியும் கச்சேரி மதிலும் பொலிஸ்டேசன் மதிலும் உடைக்கப்பட்டிருந்தது. 1971புரட்சியின்போது ஜே.வி.பி யினர் தாக்கலாம் என்று மதிலை உடைத்ததாக கூறினார்கள்.

ரெயில்வே ஸ்டேசனில் எல்லோரும் கூடி நின்றோம். ராசேந்திரா எனக்கு கூறினார். குமார் ரெயிலில் ஏறி டக்கொன்று இருக்கப்பார். கன சிங்கள சனம் இதில் இறங்கும் அப்படி இடம் கிடைக்காட்டி சிங்கள சனம் இறங்கிற இடம் பார்த்து அருகில் நின்றுகொள். மதவாச்சி இல்லாட்டி வவுனியாவில இறங்குவினம். அவையின்ரை இடத்தில் இருக்கலாம் என்று கூறினார். நான் ஒரு சிங்கள யுவதி இருந்த இடத்தின் அருகில் நின்று கொண்டிருந்தேன். அவள் மதவச்சியிலும் வவுனியாவிலும் இறங்கவில்லை. அவளுக்கு முன்னால் இருந்தவர் இறங்கினார் நான் போய் அதில் இருந்தேன். இன்னும் ஒருவர் அவளை ஆங்கிலத்தில் கேட்டார் ஏன் இறங்கவில்லை? என்று. அவள் சிரித்துக்கொண்டே பதில் கூறினாள்.

நான் பேராதனை பல்கலைக்கழகத்தில் படிக்கின்றேன், மற்றவரை வியப்பில் ஆழ்த்தத்தான் அப்படி சாறி கட்டியதாக கூறினாள். கொடிகாமம் ஸ்டேசனில் இறங்கினேன். தில்லைநாதன் எ40 காருடன் நின்றார். வேறு கார்களும் காணப்பட்டன. இராமர் கோவிலில் தோட்டம் செய்யும் இளைஞர்கள் பலர்

அவ்விடத்தில் காணப்பட்டனர். நான் எனது பாடசாலைத் தோழன் தம்பையாவின்ரை சைக்கிளில் ஏறி வீடு போய்ச்சேர்ந்தேன். சனிக்கிழமை வீரசிங்கம் வித்தியாலைய விளையாட்டுப் போட்டி நடைபெற்றது. ஞாயிறு மாலை சாப்பிட்டு விட்டு, மீசாலை ஸ்டேசனில் இரவு மெயில் ரெயில் ஏறி நடுச்சாமம் அநுராதபுரம் போய்ச் சேர்ந்தேன்.

தங்கும் விடுதி தபால் கந்தோர் சாப்பாட்டுக்கடைகள் கச்சேரி ரெயில்வே ஸ்டேசன் எல்லாம் கிட்டக்கிட்டவே அமைந்திருந்தன. வேலைமுடித்து இரவு சாப்பிட்டுவிட்டு ஆறுதலாக கடிதம் எழுதி இரவு 10 மணிக்கு தபாலில் போடலாம். அதிகாலை கடிதங்கள் கையில் கிடைக்கும். கொழும்பு மெயிலும் யாழ் மெயிலும் அங்குதான் ஒன்றை ஒன்று சந்திக்கும். கதிரேசன் கோயில் திருவிழா நடந்தது. முல்லை சகோதரிகளின் இன்னிசைக் கச்சேரியும் விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயத்தில் தமிழ் விழாவும் நடந்தது. தேன்துளி இலக்கிய வட்டம் என்று ஒரு இலக்கிய வட்டம் இருந்தது. முஸ்லீம் இளைஞர்களும் தமிழ் இளைஞர்களும் அங்கம் வகித்தனர். செங்கை ஆளியானின் வாடைக்காற்று நூலுக்கு விமர்சன அரங்கு நடைபெற்றது. நானும் பேசினேன்.

ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூச்சக்கரை என்று பகிடி விட்டார்கள். திக்வல்லை கமால் அப்பொழுது பலாலி ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் கல்வி பயின்று கொண்டிருந்தார். தன்னுடைய சக மாணவன் அன்பு ஜவஹர்ஷாவுடன் வந்திருந்தார். அன்பு ஜவஹர்ஷா அநுராத புரத்தைச் சேர்ந்தவர். நுவரவாவி தொங்கலில் ஒரு பிள்ளையார் கோவில் இருந்தது. அங்கு போவோர். அரச மரம் உள்ள இடத்தை பழைய நகரம் என்று சொல்வார்கள். நகரின் பரிபாலனம் நகரசபையோ அல்லது மாநகரசபையோ நடத்தவில்லை. நகரிற்கு என்று ஒரு அதிகாரசபை இருந்தது. நகரசபையின் உப தலைவராக சட்டத்தரணி நடராசா இருந்ததை பொறுக்க முடியமல், நகர சபையை கலைத்து அதிகாரசபையை உருவாக்கியதாக கூறினார்கள்.

5000 தமிழ் வாக்குகள் நகரத்தில் இருப்பதாக கூறுவார்கள். டிசம்பர் மாதம் வந்தது. கச்சேரியில் வருடமுடிவில் கொடுப்பனவுகள் மிகுதியாய் இருக்கும் என்று பயமுறுத்தினார்கள். கடைசி நாள் வேலை செய்வது மிகவும் கஸ்டம் என்று கூறினார்கள். குமார் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம் என்று அல்பிரட் கூறுவார். எல்லோரும் மெச்சும்படி வேகமாக வேலை செய்தோம். மீண்டும் ஒரு தடவை அரச அதிபர் நேரே வந்து பாராட்டினார். போது முகாமை யாளருக்கும் எழுதினார்.

ஒவ்வொரு பதவி உயர் விற்குப் போகும் பொழுதும் இந்தக் கடிதங்களை மேற்கோள்காட்டி நேர் முகப் பரிட்சையிலும் அவர் களுடைய வாயை அடக்கிவிடுவது எனது வழக்கம். இரண்டு வருட முடிவில் யாழ்ப்பாணத்திற்கு இட மாற்றம் கிடைத்தது. 1975ல் நான் இராசேந்திரா, அல்பிரட், ஜெயந்தி குமரேசன் எல்லோரும் வெவ்வேறு மாதங்களில் யாழ்ப்பாணக் கிளைக்கு வந்து சேர்ந்தோம். 1995 இடப் பெயர்வின் போது நண்பர் அல்பிரட் காச்சலால் பீடிக்கப்பட்டு மிருசுவிலில் மரணமானார். மிருசுவிலில் தான் அப்பொழுது அவர்கள் இருந்தார்கள். நான் ஓடிச்சென்றேன். ஒரு சிறு குடிசையில் அவரது உடல் அழகிய பேழையில் வைக்கப் பட்டிருந்தது. என்னைக் கண்டதும் அழுதார்கள். கிறிஸ்தவ கீதங்களை அவர்கள் பாடினார்கள். மனது கனத்தது. அமைதி வந்தது. நல்ல வைத்திய வசதி இருந்திருந்தால் அல்பிரட் இறந்திருக்க மாட்டார் என்று ஒருவர் கூறினார். சைக்கில் ஓடி ஓடி நாங்களும் இறந்து விடுவோம் என்று நான் கூறினேன். ■

# பிரபல சிங்கள மொழிப் பாடலாசிரியர், கவிஞர்

# நிலார் என். காசிம்


நிலார் என். காசிம்




சந்திப்பு
எம்.சீ.ரஸ்மின்

## செவ்வி

கேள்வி:- உங்களது இனஉறவு தொடர்பான எழுத்துக்கள் மீது பாதிப்புச் செலுத்திய சமூகப் பின்புலம் எத்தகையது என்று சொல்வீர்களா?

நிலார்:- என்னுடைய சொந்த இடம் மாத்தறை, சிங்கள முஸ்லிங்கள் ஒன்றாகக் கலந்து வாழ்ந்த பகுதியிலேயே என் இளமை கழிந்தது. நான் படித்தது சிங்களம். என் குடும்பத்தில் ஏனையவர்கள் தமிழைத் தாய்மொழியாக கற்றார்கள். என் உறவுக்காரர்கள் தமிழ் ஆசிரியர்கள். பாடசாலையில் படிக்கும்போதே இடதுசாரிச் சிந்தனையின் பால் என் கவனம் திரும்பியது. தார்மீகத்திற்காக எழுத வேண்டும் என்று தோன்றியது. 83களின் பின் தெற்கில் நான் கண்ட சமூக இன உறவின்பால் எழுதும் ஆர்வத்தை எனக்குள் ஏற்படுத்தியிருக்க வேண்டும். குறைவான கவிதைகளையும் அதிகமான பாடல்களையும் நான் எழுதியமைக்கான மற்றுமொருகாரணம் எனக்கு இரண்டு மொழிகளும் தெரிந்திருந்தது. மூன்று கலாசாரங்களையும் இரண்டுமொழிகளையும் சுழன்று சுழன்று பார்க்கும் ஆற்றலை இறைவன் எனக்குத் தந்திருக்கிறான். இத்தகைய பின்புலத்திலேயே நான் பேனாவைப் பிடித்தேன்.

கேள்வி:- கவிதை பாடல் இரண்டில் உங்கள் ஆற்றலை அதிகமாக வெளிப்படுத்திய ஊடகம் எது?

நிலார்:- பாடல் என்றுதான் சொல்வேன். நான் எழுதிய கவிதைகள் எண்ணிக்கையளவில் குறைவு. சகோதர பியாபத் எனும் மொழிபெயர்ப்புக் கவிதையை அண்மையில் வெளியிட்டேன். 26 தமிழ் முஸ்லிம் கவிஞர்களின் சுமார் 65 கவிதைகள் அதில் இடம்பெறுகின்றன. பு.வைரத்தினதுறை, சேரன், நு.ஃமான், மதுராகவி, ஆத்மா உள்ளிட்டவர்களின் கவிதைகள் இடம்பெறுகின்றன. மூன்று தலைமுறையைச் சேர்ந்த கவிஞர்கள் என் தெரிவில் அடங்குகின்றனர். ஏனைய மொழிபெயர்ப்புக் கவிதை நூல்களுடன் ஒப்பிடுகின்றபோது இது சற்று வித்தியாசமானது. பராக்கிரம கொடித்துவக்கு வெளியிட்ட " இந்து சகலங்கா" எனும் கவிதைத் தொகுப்பு பலரால் வியந்து பாராட்டப்பட்டதுண்டு. இந்நூல் பற்றி ஒரு முறை சேரனுடன் பேசிக் கொண்டிருந்தபோது "இதில் இடம் பெற்ற என் அப்பாவின் கவிதைகளை வாசித்தபோது பராகிரம எனும் கவிஞரின் கவித்துவமே மேலேங்கி நிற்கிறது" என்றார். இது மொழிபெயர்ப்பில் உள்ள சில சிக்கல்களை எடுத்துக்காட்டுவதாகவும் உள்ளது. ஆனால் சகோதர பியாபத் எனும் தொகுப்பில் இப்பிரச்சினை இடம் பெறவாய்ப்பில்லை. எனது இருமொழித் தேர்ச்சி இதற்குக் காரணமாக இருக்கவேண்டும். பேராசிரியர் நு.ஃமான் தனது மூலக் கவிதையை என் மொழிபெயர்ப்புடன் ஒப்பிட்டு பாராட்டினார். ஜெயபாலன், எம்.எச்.எம். ஷம்ஸ் போன்றோரும் வாழ்த்தினார்கள். அந்தவகையில் சொந்தக்கவிதைகளும் மொழிபெயர்ப்புக் கவிதைகளுமே எனக்கான அடையாளத்தை அதிகம் தந்தன. ஆனால் எண்ணிக்கையளவில் பாடல்களேயே நான் அதிகம் எழுதியிருக்கிறேன். பெஹெசர, அருனக் கிரிக்கோடுஹித்தட என்பன எனது பாடல் தொகுப்புகள்.

**கேள்வி:-** *இன உறவு கருத்தியலை அதிகம் தொடர்புபடுத்திப் பாடல் எழுதிய பாடலாசிரியர் ரத்னஸ்ரீ விஜேசிங்க பற்றி உங்களது மதிப்பீடு எத்தகையது?*

நிலார்:- எனது கணிப்பில் அவர் தரத்தில் முதன்மையானவர். அவருக்குப் பின்னர்தான் அடுத்தவர்கள். ரத்னஸ்ரீயின் பார்வை ஆழமானது. இந்தப் பாடல் ஊடகத்தை அவர் ஒரு போதும் பிரச்சார வாகனமாக பயன்படுத்தியதில்லை. அடுத்தவர்கள் தரிசிக்காத பாகங்களை எல்லாம் இனஉறவு தொடர்பில் ரத்னஸ்ரீ தரிசித்துள்ளார். அவருடைய மொழி மிகவும் பரந்துபட்டது. பழைய இலக்கியங்களின் மீதான ஈடுபாடு இது வரை இருந்தே வருகிறது. சுபஉதே சயக், பிய நொவன் அய்யன்டி, வத்சானே, தருலகுண என்பன அவருடைய கதைத்தொகுப்பில் சில. பாடல் பற்றி பல நூல்கள் வெளிவந்துள்ளன.

**கேள்வி:-** *பௌத்த முதன்மைவாதம், சிங்கள இனமுதன்மை வாதம், என்பன தொடர்பாக மாத்திரம் பாடல்களை எழுதுகிறவர்களின்குரல் நியாயமானதா?*

நிலார்:- இல்லை நியாயமென்று சொல்ல முடியாது. முதன்மைவாதம் என்பதால் எனக்கு ஈடுபாடு இல்லை. அல்லே குணவன்ச தேரர், அரிசன் அஹீம்புது போன்றோரிடத்தில் இத்தகைய போக்குகள் உண்டு. இவர்கள் பல்லினம் பல்கலாசாரம் பன்மொழி என்பவற்றுக்கு ஏற்புடமை மறுப்பவர்கள். சில சமயங்களில் பேசுகின்றபோது தமிழ் முஸ்லிம், சிங்களவர் மூவரும் சரிசமனாவர்கள். ஏற்றதாழ்வு இல்லை என்று சொல்வார்கள். "தமன் லியனதேட்ட அவங்கவீம "(தாம் எழுதுவதற்கு ஒப்ப நடத்தல்) என்று சொல்வது போல் இவர்கள் நடப்பதில்லை. எழுதுவது வேறு ஒழுகுவது வேறு என்பது இத்தகையவரின் போக்கு. ஆனால் மஹகய சேகர, மஹிந்த சந்திரசேகர, ரத்னஸ்ரீ போன்ற சிலர் நியாயமாக இது பற்றி எழுதுகின்றனர். எல்லே குணவன்ச போன்றவர்களின் தேசபிமான எனும் கருத்தியல் ஒரு தலைப்பட்சமானது. சமகால பல்கலாசார சூழ் நிலையில் சிங்கள தேசபிமான பாடல்களின் தரம் பற்றி பேசுவதில்


கூட சிக்கல்கள் உள்ளன. போர்களத்தில் இறந்துபோவது அடுத்த ஜென்மத்தில் சுவர்க்கம் புகப்போதுமானது என்றதொனியும் போர்களத்தில் செத்தவன் சிங்களவனாகின் காயம் நெஞ்சில் இருக்கும். எதிரியாகின் முதுகில் இருக்கும் போன்ற தொனியும் இராணுவ நலன் பாடும் பாடலில் அதிகம் இழையோடுகின்றது. இவற்றை எழுதியவர்கள் சிங்களவர்கள் சிங்கள இனமுதன்மை வாதத்தை வரித்துக் கொண்டவர்கள். ஆரம்பத்தில் ஹெல, சிங்ஹல என்றபதம் பொதுவாக சகலரையும் குறிக்கும் தொனியிலேயே பயன்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் இன்று சிங்கள எனும் பதம் தமிழ் விரோதச் சொல்லாகப் (Anti Tamil) பயன்படுத்தப்படுகிறது.

*கேள்வி:- இரு மொழிகளும் கொண்ட நீங்கள் தமிழ் சிங்களப் பாடல்களேயே ஏதாவது வேறுபாடுகளைக் காணுகிறீர்களா?*

நிலார்:- அதிகமான வேறுபாடுகளைக் காணுகிறேன். தமிழ்ப் பாடல்கள் பெரும்பாலும் திரைப்படங்களுக்காக எழுதப்படுகின்றன. சிங்களப் பாடல்கள் திரைப் படங்களுக்காக எழுதுவது குறைவு. அந்தவகையில் சூழ்நிலைக்கு, இசைக்கு, ரசனைக்கு, கட்டுப்பட்டு நடக்க வேண்டிய தேவை தமிழ் பாடலுக்குண்டு. இதனுடன் ஒப்பிடும் போது சிங்களப் பாடலாசிரியர்கள் சுதந்திரமானவர்கள். தொழிநுட்ப வளைவுக்கு ஏற்ப மொழியை வளைத்துப்போட வேண்டிய அவசியமில்லை. நான் இசையைப்பற்றி குறிப்பிடவில்லை. சிங்களப்படல் ஆசிரியர்கள் அடிமட்ட மக்களின் வாழ்வியலை உள்வாங்கி நிற்கின்றனர். ஆரம்ப காலங்களில் நான் கேட்ட தமிழ் பாடல்களுக்கும் இப்போது கேட்கும் தமிழ் பாடல்களுக்கும் பெரும் வித்தியாசம் உள்ளன. அந்தவகையில் சிங்களப்பாடல்களின் தரம் உயர்வாக நிற்கிறது. ஆனால் தற்போதய சிங்களப்பாடல்களில் சில குறைபாடுகளும் உள்ளன.

*கேள்வி:- இராணுவக் கலாசாரத்தை வலுவடையச் செய்யும் வகையில் பாடல்கள் எழுதுவதை எவ்வாறு நோக்கலாம் ?*

நிலார்:- அவற்றை சிங்களத்தில் ரணவிரு கீ என்று சொல்வார்கள். இராணுவத்தினரின் போராட்ட மனோபாவத்தை அதிகரிக்கச் செய்யும். நோக்கிலேயே இவை பெரும்பாலும் எழுதப்படுகின்றன. மாக்சிச கண்ணோட்டத்தில் பார்த்தால் இராணுவம் யாருக்காகச் சேவை செய்கிறது. யாருக்கு சேவை என்பது வாதத்திற்குறியதாக மாறும். இராணுவ ரீதியான ஆயுதப்போராட்டதை வலுவடையச் செய்யும் பல பாடல்கள் சிங்களத்தில் உள்ளன. இவற்றை எந்தவிதத்திலும் வரவேற்க முடியாது. அதே நேரம் "ரன்மனக் லெசதோதின்" என ஆரம்பமாகும் குமாரதாச சப்புத்தந்தரியின் பாடலொன்று தரம் வாய்ந்ததொரு பாடலாகும். இவ்வாறான சிங்களப்பாடல்களை அடையாளம் காணுவது கஷ்டம்.



**ரத்னஶ்ரீ எழுதிய (குணதாச கபுகே பாடியது)**
**நவத்தன்ன ஒல்வரசன்**
**நவத்தன்ன பொண ஜயாபன்**
**கைதட்டல்களை நிறுத்துங்கள்**
**களிப்பு மமதையையும் நிறுத்துங்கள்.......**

என்ற பாடல் இராணுவரீதியான அடர்ந்தேறல்களை மிகத்துல்லியமாக புரிந்துகொள்ளும் விதத்தினை எடுத்துக்காட்டும்.

*கேள்வி:- பாடல்களுக்கு அப்பால் கவிதையாக்கங்களின் மூலம் இன உறவு தொடர்பாக பேசிய கவிஞர்கள் பற்றி?*

நிலார்:- கவிஞர் என்ற வகையில் பலரைக் காட்டலாம். பராகிரம கொடித்துவக்கு பலகவிதை தொகுப்புகளை எழுதி வெளியிட்டார். இந்து சலகங்கா (மொழிபெயர்ப்பு) அகீகரு புத்தயெகுகே லோகய (வாஞ்சையற்றவனின் உலகம்) நவத்தன்ன நல்வரசன் (கைதட்டல்கள் நிறுத்துங்கள்) அலுத்மினிஹு (புதிய மனிதர்கள் வந்துவிட்டார்கள்) போன்றன குறிப்பிடத்தக்க தொகுதிகள். தயாசேன குணசிங்க, அப்பு ஆராச்சி போன்றேரும் எழுதியுள்ளனர். அடுத்த பரம்பரையில் மஞ்சுலாவெடிவர்தன முக்கியமானவர். சமகாலத்தில் அஜித் பெரகும், ஜயசிங்க ரோஹித்த பாசன, அபேயவர்தன, அஜித் டி ஹேரத் உள்ளிட்ட பலரும் எழுதிவருகின்றனர். சமகாலத்தில் குறித்த ஒரு சமூகத்தை, மொழியை, இனத்தை மாத்திரம் முன்னிருத்திப் பார்க்கும். மனோபாவம் இருப்பதாக தெரியவில்லை.

*கேள்வி:- நீங்கள் எழுதிய ஒரு பாடல் (சலாம்கியா கெட்ட ஈன) இஸ்லாமிய பெண்ணடிமைத்துத்தை கட்டமைப்பதாக பர்தாவை குறியீடாக கொண்டமைவதாக சொல்கிறார்களே?*

நிலார்:- உண்மைதான். இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள உரிமைகள் வேறு எந்த மார்க்கத்திலும் வழங்க வில்லை. பெண்களின் விடுதலையில் இஸ்லாம் அதிக அக்கறை கொண்டிருக்கிறது. ஆனால் அதனைச் சிலர் புரிந்துகொள்வதில்லை. பர்தா இஸ்லாமிய கலாசாரத்தினதும் ஒழுக்கத்தினதும் அடையாளம். அதனால் சிலர் தம்மைத் தாம் கட்டுப்படுத்திக் கொள்ளவும் அடக்கிக் கொள்வதற்காகவும் பயன்படுத்திக் கொள்கிறார்கள். நான் அதனைப்பற்றித் தான் பேசுகிறேன். பர்தா பெண்ணடிமைத்தனத்தின் குறியீடு அல்ல. அனேகமான முஸ்லிம் கிராமங்களில் பால்ய விவாகம் நடைபெறுகின்றன. பெண்கள் சிறுவயதில் திருமணச் சிறைக்குள் தள்ளப்படுகிறார்கள். ஆனால் நீங்கள் குறிப்பிடும் பாடலில் அப்படியெதையும் நான் பேசவில்லை.



**பாசத்தின் ஆசனமிடு**
**நட்சத்திரமே**
**பர்தாக்குள் மறைந்து கொள்ளும்**
**பெண் நட்சத்திரமே .........**
**அல்குர்ஆனின் அட்சரங்கள்**
**அழகிய நெற்றியிலே**
**கண்ணீராய்ப் படிந்ததோ ?**

*கேள்வி:- பெரும்பாலான காதல் பாடல்களின் தலைவன் சிங்கள ஆண்மகனாகவும் தலைவி தமிழ் அல்லது முஸ்லிம் பெண் மகளாகவும் இருப்பது ஏன்?*

நிலார்:- இது சமகாலத்து பாடலாசிரியர்களிடம் உள்ள ஒட்டு மொத்தக் குறைபாடாகும். இதனை வர்க்கவாதத்தின் கண் கொண்டு பார்ப்பதா அல்லது ஆண் முதன்மைவாதத்தின் கண் கொண்டு பார்ப்பதா என்று தெரியவில்லை. இது அதிக விமர்சனங் களுக்குள்ளான விடயம்.

**பல்லினம் பல்கலாசாரம் பன்மொழி என்பவற்றுக்கு ஏற்புடமை மறுப்பவர்கள், சில சமயங்களில் பேசுகின்றபோது தமிழ் முஸ்லிம், சிங்களவர் அனைவரும் சரிசமமானவர்கள். ஏற்றத்தாழ்வு இல்லை என்று சொல்வார்கள்.**



**கேள்வி:-** *பொருளைவிட மொழியின் ஆதிக்கம் உங்கள் கவிதைகளிலும் பாடல்களிலும் இருப்பதாகக் கூறப்படும் விமர்சனத்துக்கு நீங்கள் ஏதாவது கருத்து வைத்துள்ளீர்களா?*

நிலார்:- விமர்சனங்களுக்கு மறுப்புத் தெரிவிப்பது என் பண்பல்ல. நான் இரு மொழியாளன் என்பது ஒரு காரணம். சிங்களத்தில் எழுதுகிறபோது தமிழின் ஆதிக்கம் நான் அறியாமல் வந்தவிடலாம். ஆனால் என் பாடல்களும் கவிதைகளும் பொருளைவிட மொழியின் ஆதிக்கம் அதிகம் என்று சொல்ல முடியாது. ஏராளமான சரளமான பாடல்களை நான் எழுதியுள்ளேன். பெரும்பாலான பாடல்கள் ரசிகர்களின் மனதை ஆக்கிரமித்துள்ளது. மொழி ஆதிக்கம் இருந்தால் இது சாத்தியப்படாது அல்லவா? தமிழில் உள்ள பண்புகளையும் சிங்களத்தில் புகுத்தி வெற்றி கண்டதுண்டு. ரத்னஸ்ரீ கூட மொழிச் செறிவு மிக்க பாடல்களை எழுதியுள்ளார்.

**கேள்வி:-** *பிரபல பாடலாசிரியர் பேராசிரியர் சுனில் ஆரியரத்ன இனஉறவு பற்றிப் பேசினாலும் அவ்வப்போது சில சிங்கள முதன்மைவாத ஆதரவு பாடலையும் எழுதியுள்ளாரே?*

நிலார்:- சுனில் ஆரியரத்ன மேல் அனேகருக்குள்ள விமர்சனம் இது. அவர் அறியாமலே அவ்வாறு எழுதியிருக்கக் கூடும். சமகாலத்தில் அவர் எழுதுகிற பாடல்களில் அத்தன்மையில்லை. சிங்கள இனத்தின் மீதும் மொழியின் மிதும் அவருக்கு இயல்பான பற்றுண்டு. இது அவரின் பாடல் மூலம் தெரியலாம். இந்த உணர்வு அளவு கடந்து சில பாடல்களில் மேலிடுவதுண்டு. ஆனால் சிங்கள பாடலிலக்கிய வளர்ச்சியில் அவர் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். அவருக்கென்று தனியான இடமுடண்டு. அதனை மறுக்க முடியாது. முதலாளித்துவத்தை எதிர்த்து சமூகவளர்ச்சியின் மீது நாட்டங்கொண்டு அவர் பல பாடல்களை எழுதியுள்ளார். அதுபோலவே லூஷன் புலத் சிங்ஹலவுக்கும் தனியிடம் உண்டு.

**கேள்வி:-** *தமிழ் வாசகர்களிடம் நிலார் என்னும் ஆளுமை எவ்வாறு அறிமுகம் செய்ய வேண்டும்?*

நிலார்:- (சிரிப்புடன்) அதனை நான் சொல்ல வேண்டும். அண்மையில் ஒரு புத்தக வெளியீட்டில் பேராசிரியர் சுனில் ஆரியவர்தன ஒரு விடயத்தை சுட்டிக் காட்டினார். சிங்களத்தை விஷேட பாடமாகக் கற்று பட்டம் பெற்ற முதலாவது சிறுபான்மை என்பதுதான் அந்த விடயம். எனக்கான அங்கீகாரம் அதுவல்ல. முஹிதின் ஏ.எம்.ராஜீ தௌஸ் மாஸ்டர் அடங்கலாக முத்தழகுவரை நீண்ட ஒரு சிறுபாண்மையினர் பட்டியல் உள்ளது. அதில் எனக்கு பங்கும் பணியும் இடமும் தனியானது என்று நினைக்கிறேன். என்னை ஒரு பாடலாசிரியராகத் தான் தெரியும்.

ஆனால் பாடல்களுக்கு அப்பால் வேறும் ஆக்க எழுத்து முயற்சிகளில் நான் ஈடுபட்டுள்ளேன். வெகு அண்மையில் சகோதர பியாபத் எனும் மொழிபெயர்ப்புடன் பாதிக்குழந்தை (அந்ததருவோ) எனும் மொழிபெயர்ப்புச் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டேன். அயலவர், இலக்கியம் பற்றி (அசல் வெசியாகே சாஹித்ய) ஆய்வையும் வெளியிட்டேன். இலங்கையின் தமிழ்கவிதைகளின் சிறுபான்மையின் அடையாளங்கள் தொடர்பாகவும் கவிதை விமர்சன நூலொன்றை எழுதியிருக்கிறேன். இனி நீங்கள் தான் அறிமுகம் செய்ய வேண்டும். ■

# வாலிபம்

ச.முருகானந்தன்



கொசுக்களின் ரிங்காரமும்
குடித்துறிஞ்சலும்
உசுப்பி விடுகிறது
தனித்த இரவின் ஆழ்ந்த தூக்கத்தை

மர்ம நினைவுகளின்
அவிழ்க்க முடியாத
முடிச்சுக்களின் இறுக்கத்தில்
மூச்சு முட்டிப்போய்
உடல் தகிக்கிறது...

முகம் தெரியாத
அல்லது தெரிந்த மோஹினிகளின்
தரிசனம் ஊர்வலமாகி
நீண்டு கொண்டு போகிறது
வாலிப இரவு

அமைதியைக் கிழித்தபடி
டிக் டிக் டிக்
கடிகார முள் அசைவா?
லப் டப் லப் டப்
என் இதயத் துடிப்பா?

எனக்கொன்றொருத்தியாய்
அவள் வரப்போகிறாள் ?
எப்போது வரப்போகிறாள்?
அருபமான அலைச்சலில்
நினைவுகள் தாலாட்டுகிறது

நித்திரா தேவி மறுபடி தழுவ
கனவில் வந்தொருத்தி
கட்டியணைத்தபடி
சொர்க்கம் தந்து மறுபடி
உறக்கம் கலைக்கிறாள்

மழையா? ஒழுக்கா? தூவானமா?
இல்லை இல்லை, அவள் தான்
இந்திரியப்ப பாய்ச்சலால்
வர்ண வஸ்திரங்களை
ஏற்படுத்தியபடி ...

# எழுத்தாளர்களும் அங்கீகாரமும்

நிந்தவூர் ஷிப்லி

"இவருடைய எழுத்தை அங்கீகரிக்க முடியாது.., இதுவெல்லாம் படைப்பா? ச்சீ" "இவன் நேற்று வந்தவன், எழுத்துலகம் பற்றி இவனுக்கு என்ன தெரியும்? இதை எழுதும் இவனுக்கு மொழியறிவு அறவே இல்லை" இப்படியான பல வசைப்பாடல்களை பல ஆண்டுகளாக நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். முதலில் இப்படியான சவால்களும் பிரதிவாதங்களுமே ஒரு படைப்பாளியை ஆளுமைமிக்க ஒருவனாக / ஒருத்தியாக மாற்றவல்லது ஆயினும் இத்தகைய எதிர்ப்புக் குரல்கள் இலக்கிய உலகின் முதிர்வற்ற போக்கையே எடுத்துக் காட்டுகிறது என்பதே கண்கூடு.

உண்மையில் ஒரு எழுத்தாளன் மற்றைய எழுத்தாளர்களை மதிக்கத் தெரிந்திருக்க வேண்டும். அதுவே அவனது துரித வளர்ச்சிக்கு மறை காரணியாகவும், ஊன்று கோலாகவும் அமைகிறது என்பது பலருக்கு தெரியாத உண்மை...? ஏதோ ஒரு சில படைப்புக்களைப் படைத்திருக்கிறோம், ஓரிரண்டு நூல்களை எழுதியிருக்கிறோம் (சிலர் ஒரே ஒரு நூலை மாத்திரம் எழுதிவிட்டு இந்தக் குதியாட்டம் போடுவார்கள்) என்பதற்காக வளர்ந்து வரும், ஏன் வளர்ந்துவிட்ட ஒரு படைப்பாளியின் படைப்புக்களை தாக்கியும், எதிர்த்தும் பேசுவது இலக்கிய நேர்மைக்கும், எழுத்தாளர்களின் ஒழுக்கவியலுக்கும் முரண்பாடான விடயமே அன்றி வேறில்லை.

இங்கே நான் குறிப்பிட விளைவது விமர்சனத்தையோ அல்லது ஆழமான கருத்தாடல்களையோ அல்ல என்பதனை மனங்கொள்வது முக்கியமானது. நல்லது. மேலும் வளர்ந்துவரும் கலைஞன் என்பது எழுத்தை உயிர்மூச்சாக நினைப்பவர்களையே ஒழிய சில அற்ப நோக்கங்களாகவும், பகட்டுக்காகவும் தங்களையே அடகுவைப்பவர்கள் அல்ல என்பதையும் சொல்லிவிடுவது நல்லது.

உண்மையில் ஒரு படைப்பு உருவாக்கப்படும் போது (அது கவிதையாகவோ, கட்டுரையாகவோ, கதையாகவோ, நாடகமாகவோ அல்லது இலக்கியத்தின் எந்த ஒரு வகையாகவும் இருக்கலாம்) அது உருவாக சில பின்னணிகள், சில உத்வேகக் காரணிகள், சில பிரளய நிகழ்வுகள் அல்லது உண்மைச் சம்பவங்கள் அதன் கருப்பொருளாக அமையலாம். அது படைப்பை படைப்பாளியைச் சார்ந்தது. அதை சரிவரப் புரிந்து கொள்ளாமலும் தரமிக்க படைப்பின் உள்ளார்ந்தங்களை உணரும் அளவுக்குப் பக்குவப்படாமலும் எடுத்த எடுப்பில் வார்த்தை ஏவுகனைகளை வீசும் எழுத்தாளர்களை எழுத்தாளர்கள் என்று சொல்வதே மிகப்பெரிய குற்றம். இது அவர்களது

ஆளுமையையோ அனுபவ முத்திரையயோ விளம்பரம் செய்ய வில்லை. மாறாக வெறும் காழ்ப்புணர்ச்சியையும் மமதையையும் அகங்காரத்தையுமே அன்றி வேறெதை சுட்டி நிற்கிறது? இடையில் தங்களை தாங்களே மிகப்பெரிய எழுத்தாளர்களாக உருவகப்படுத்தும் இவர்களுக்கு ஏன் இப்படியான மமதை இருக்கிறது.? ஒரு வேளை அவர்களின் இயலாமையின் வெளிப்பாடாக இருக்கலாம்.? என்கிற கேள்வி இயல்பாக எழுவதை தவிர்க்க முடியவில்லை.

ஒரு படைப்பாளி மனிதபிமானமிக்க ஒருவனாக இருக்கும் பட்சத்திலே அவனால் சமூகத்திற்கும் தனிமனிதனுக்கும் பயனுள்ள வெளியீடுகளை பிரசவிக்க முடியும். இன்னொருவனைத் தாழ்வாக எண்ணும் எவனாலுமே காத்திரமான, யதார்த்தமான வரவேற்கத்தக்க வெளியீடுகளைத் தரமுடியாது. இது எழுத்துத்துறை என்றில்லை. எல்லாத் துறைகளுக்குமே பொருந்தக் கூடியது.

**கவிஞர் வாலி அழகாகச் சொல்வார்**

"ஊக்குவிக்க ஒருவன் இருந்தால்
இன்று
ஊக்கு விற்பவன் நாளை
தேக்கு விற்பான்"

பல நல்ல கலைஞர்கள் இவ்வாறான ஊக்குவிக்கும் உந்து சக்தி இல்லாமலும், மேற்சொன்ன வஞ்சக வசைபாடல்களாலும் படைப்புலகை விட்டு விலகிக்கொள்கின்றனர்கள் என்பது குறிப்பிடத்தக்கதும் வருத்தமானதும் ஆகும்.

இது தரமான படைப்பு என்றும் தரமற்ற படைப்பு என்றும் எதை வைத்து நிர்ணயிப்பது? சிலருக்கு சில படைப்புகள் அழகாகவும், ஆழமாகவும் அதே படைப்புகள் இன்னும் சிலருக்கு மோசமாகவும், அவசியமற்றதாகவும் தோன்றலாம். இதில் தவறில்லை. அது அவரவர். பார்வைகளையும், இரசனைகளையும், அசுபவங்களையும், அநுமானங்களையும் பொறுத்தது. அப்படி நேர்கிற போது பிடித்தவற்றை பாராட்டுவதும் தவறுகள் உள்ளவற்றை புண்படாதவாறு விமர்சித்து திருத்த முயற்சிப்பதும் இரண்டுமே முடியாவிடில் அந்தப்படைப்பை விட்டுவிட்டு வேறு வேலையைப் பார்ப்பதுமே சரியான ஒரு எழுத்தாளனின் கடப்பாடு. அதை விடுத்து தூற்றுவதும் பகிரங்கமாக சாடுவதும் கண்டிப்பாக தடுக்கப்பட வேண்டிவைகள் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது என நம்புகிறேன்.

மேலும் 'இந்தப்படைப்பை அங்கீகரிக்க முடியாது' என்பதை வெளிப்படுத்த இவர்கள் யார்? இவர்கள் என்ன இலக்கியத்திற்கு யாப்பு வரைந்தவர்களா? ஏன் இவர்களது படைப்புகளில் எந்தக்குறையுமே இல்லையா? சம்பந்தப்பட்டவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.

வளர்ந்துவரும் ஒருவனை தட்டிக்கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் அவனது சொந்த முயற்சிகளால் அவன் மேன்மையடயலாம். ஆனால் வெட்டி வீழ்த்த முனைவதெல்லாம் ஐந்தறிவு ஜீவன்களிடமும் இல்லாத பண்பு இல்லையா? யாருக்கும் யாரும் அங்கீகாரம் தரத்தேவையில்லை. திறமையும் தீராத உழைப்பும் விடா முயற்சியும் நிறைந்தவர்கள் காலப்போக்கில் மிளிரத் தொடங்குவதும் ஏனையவர்கள் அடையாளமிழந்து போவதும் இயற்கையாகவே நிகழவல்லது. இடையில் புகுந்து குழப்புவது சிறு பிள்ளைத்தனமானது.

"பேச்சைவிட மௌனமே சிறந்தது" என்கிற முதுமொழியை இத்தகையவர்கள் சரியான நேரத்தில், சரியான விதத்தில் பயன் படுத்துவர்களாயின் வீண் பிரச்சினைகளையும் தவிர்த்துக்கொள்ளமுடியும். அத்தோடு தகுதியான கலைஞர்கள் இலக்கிய வானில் பிரகாசித்துக் கொண்டிருப்பார்கள். அல்லது இந்நிலை தொடர்ந்து நீடிக்குமாயின் கவிஞர் வைரமுத்து சொல்வதைப்போல,

"கத்தும் நாய்க்கு காரணம் வேண்டாம்
தன் நிழல் பார்த்து தானே குரைக்கும்
உலகின் வாயை தைத்துவிடு அல்லது
உனது செவிகளை மூடிவிடு
உலகின் வாயைத் தைப்பது கடினம்
உனது செவிகளை மூடுதல் சுலபம்" என்பதற்கு அமைய

இத்தகைய சில்லறைக்கும் பெறுமதியில்லாத சொல்லாடல்களை தூக்கியெறிந்து தொடர்ந்து படைப்புகளைப் படைத்துக் கொண்டிருப்பதே வளரும்




அந்த காலை நேரக் காற்று
என் மரணச் சேதியை
தாங்கி வந்தது.

ஒரு பூ விழுந்தால்
உடைந்து போகும்
என் இதயத்தில்
பெருங்கல் விழுந்து நசிக்கிற்று

சுயம் செத்துப்போய்
மனசுக்குள்ளே மரணப்போராட்டம்

கனவுகளை கசக்கி
கண் விழித்த போது
காலை கடந்து போயிற்று

எழுத்திராணியற்று
நினைவு வெளியில்
ஆத்மா அடங்கிற்று

இரவு பிறக்கு மட்டும்
இதயவலி படர்கிறது

வெற்றிடங்களை நிரப்ப
வேறு வழியில்லாமல்
மௌனமே வியாபிக்கிறது

நீடிக்கும் இரவுகளில்
சமாதானக் கோப்புக்களில்
கையெழுத்திட்டது மனசு

இன்னும்
இரவு விழித்துக் கொண்டிருந்தது
என் கண்ணீர்த் துளிகள்
ர(ரு)சித்த வண்ணம்.

– ஷிஃனா






அக்ஸர்

# தமிழ் சினிமா வரைபடம்

## மாற்றங்கள் பற்றிய குறிப்புகள்

தமிழ் சினிமா தனது வரைபடத்தை புதிய அணுகுமுறைகள் நோக்கி நகர்த்திச்செல்வது மகிழ்ச்சியானதொரு அம்சமாகும். இன்றைய வாழ்க்கைச் சூழலின் யதார்த்தம் நிறைந்த கூறுகளை தமது காட்சிப் பிமபங்களுக்கூடாக மக்களது வாழ்வைப்பிரதிபலிக்கும் வண்ணம் அமைத்துவர எத்தனிக்கும் முயற்சிகளை, பரீட்சார்த்தங்களை வரவேற்க வேண்டும்.

தமிழ் சினிமா 75வது அகவையில் இருந்து கொண்டு, தனது கட்டமைப்பை இன்னும் மரபு தழுவிய கற்பனா பிம்களின் கிரபிக்ஸ் (Graft) முறையை கட்டமைத்துக்கொண்டு யதார்த்தங்களை குழி தோண்டிப் புதைத்துக்கொண்டு தருதலை சற்று குறைத்துவருகிறது என்பது மகிழ்ச்சியான விடயம். இருப்பினும் தமிழ் சினிமாவின் அடிப்படைக் கூறுகளில் இன்னும் கனதியான மாற்றம் இல்லை. குறிப்பாக பாடல்கள், மாயா ஜால சண்டைக்காட்சிகள் என்பனவற்றின் போலித்தனங்களின் இறுக்கங்களிலிருந்து தமிழ் சினிமா போதிய விடுபாடுகளை காட்ட வில்லை. தமிழ் சினிமா உலகு அல்லது வரம்பு தமது அடிப்படைவாத எண்ணங்கள், படிமங்கள் போன்றனவற்றில் குறிப்பிடத்தக்க திருப்பங்களை காட்டாதவிடத்து சினிமா என்ற தளத்தின் பிரயோகங்கள் யதார்த்தமாக மக்களை போய்ச் சேராது என்பது சினிமா விமர்சகர்களின் விமர்சனமாகும். எனவே சினிமாவின் முக்கியத்துவத்தை சினிமாத்துறையினர் உணர்ந்து செயலாற்றுவதனை விரும்புகிறோம்.

அண்மையில் வெளிவந்துள்ள தசவதாரம், குசேலன் ஆகிய படங்களை வைத்துக்கொண்டு இக்குறிப்பை பகிரமுனைகிறோம்..

தமிழ் சினிமாவில் குறிப் பிடத்தக்க பரிமாணத்தை காட்டிய படங்களில் தசவதாரம் முதன்மை யானது. இதற்கு முன்னைய காலங் களில் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று மாயாஜால பிம்பங்களின் கோர்வைகள் மூலம் வந்த படங்கள் இருப்பினும் அவை குறிப்பிடத்தக்க வரலாற்றுப் பதிவாக அமைய வில்லை. ஆனால் ஏலவே நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ஒன்பது வேடங்களில் நடித்து உலக சினிமாவில் தனது பெயரை ஆழப் பதித்திருந்தார். இத்தகைய அரிய சாதனைகளை முறியடிக்கும் இலட்சிய நோக்குடன் தனக்கான தனித்துவ பிரதிபலிப்புக்களுடன் உலக நாயகன் கமலஹாசன் தசவதாரத்தை தந்து ள்ளார். தசவதாரம் கமலின் பத்து வேடங்கள் அடங்கி ஒரு திரைப்படம் என்பது பொதுவாக இரகசியர்களுக்குத் தெரியும். ஆனால் இத்திரைப்படத்தில் கமலும் இயக்குனர் ரவிக்குமாரும் புதிய தாற்பரியத்தை நிறுவியுள்ளனர்.

இத்திரைப்படத்தின் மூலம் Butterfly மற்றும் Chaos ஆகிய இயற்கை நிலைத் தத்துவங்களை தந்துள்ளனர். ஆங்கில சினிமாத் தரத்திற்கு இந்திய சினிமாவை கொண்டும் நிறுத்தும் ஓர் அபார முயற்சி இங்கு சாத்தியமாகிறது. கமல் தனது படங்களில் புதிய அணுகுமுறைகளை கையாளுவது, யாரும் அறிந்த ஒன்று. ஆனால் இவ்வாறான கடின வேலை களை அவர் செய்ய எத்தனிப்பது அசாதாரணமே.

இந்த அடிப்படையில் பாத்தி ரங்களின் வேறுபட்ட அமைப்புக்கேற்ப கதையை அமைத்துள்ளமை சிறப்பே. இத்திரைப்படத்தில் வரும் பத்துப் பாத்திரமும் தனித்துவமான கதைகளை காட்டியிருப்பினும் காட்சியின் இடையில் அவை ஒன்றோடு ஒன்று இயல்பாக இணைந்து விடுகின்றன. சாதாரண ரசிகனால் புரிந்து கொள்ள முடியாத தன்மைகளை கதையின் ஒவ்வொரு பகுதியிலும் Butterfly மற்றும் Chaos ஆகிய இயற்கை நிலைத் தத்துவங்கள் இழையோடுகிறது.

இத்திரைப்படத்தின் பிரமிக்கும் காட்சியமைப்பும், அதற்கு பின்னுள்ள உழைப்பும் நிஜமாக தமிழ் சினிமாவை உலகத்தரத்திற்கே அழைத்துக் கொண்டு செல்கிறது. வாழ்த்துக்கள்.

குசேலன் திரைப்படத்தை எடுத்து நோக்கும் போது, இத் திரைப்படம் ஒரு சாதாரண திரப்படமாக காணப்படுகிறது. இருப்பினும் தமிழ் சினிமாவின் நட்சத்திர நடிகராக விளங்கும் ரஜினிகாந்த் திரைப்படம் என்பதால் இத்திரைப்படத்தில் சாதாரண Heroism துலங்குகிறது.

ஆனால் இத்திரைப்படத்தில் அசாதாரண சண்டைக்காட்சிகள் அரிது. சில யதார்த்த உணர்வுகளைத் தரும் காட்சிகளும், கதாபாத்திரமும் மனதில் பதிகிறது. வெயில் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் குறிப்பிடத்தக்க வரவேற்பைப்பெற்ற பசுபதியின் உணர்வுபூர்வ நடிப்பும் ரஜினியின் வழமையான நடிப்பும் கதையை உயிர்ப்புடன் தருகிறது. நட்பை வேறு பட்ட கதை மூலமும் தமிழக சினிமா சூழலுக்கு ஏற்பவும் பீ. வாசு கதையை நகர்த்தியிருப்பது புதமை. இத்திரைப் படத்தின் உரையாடலும் வித்தி யாசமான கட்டுடைப்பாக தெரிகிறது. வாழ்த்துக்கள்.

அண்மைய தமிழ் சினிமா அறுவடைகளான பருத்திவீரன், மொழி, வெயில் போன்றன கலையுலகில் பேசப்பட்ட படங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான மாற்றங்கள் தமிழ் சினிமாவிற்கு இன்றி அமையாதன என்பது திண்ணம்.

அண்மையில் திருமண பந்தத்திலே இணைந்து கொண்ட நாச்சியாதீவு பர்வீன் தம்பதிகளை படிகள் வாழ்த்தி மகிழ்கிறது.

# மரியம் வேம்பு

வ.ஐ.ச.ஜெயபாலன்

பாங்கொலி ஓய்கிற போதெலாம்
அந்த தென்னஞ் சோலைக்கிராமத்தில்
ஓங்கி ஒலிக்கிறது
அந்த வேப்ப மரத்தின் அழுகை ஒலி
தேற்றுவாரில்லை
நேற்று நடந்ததை யாவரும் மறந்தனர்
இன்று வந்தனர், பிறந்தவர்களுக்கு
நேற்றைய கதைகளைச் சொல்வாருமில்லை

அந்தப் போடியாரின் பெண்கள் இப்போ
எந்த வீட்டின் வாசற்படியிலும் குப்பை கொட்டலாம்
அந்தப் போடியாரின் முன்னே இப்போ
வயல்காரர்கள் நிமிர்ந்திட அஞ்சினர்
எனினும் அந்த வேம்பின் கண்ணீர்
நல் மனசுக்ளில் வேர் விடுகிறது.

அந்தப்போடியார் பள்ளிக்குப் போகிறார்
அதிகாரிகளுடன் மது விருந்தாடி
மனசுள் தன்னை எதிர்பார்ப்பவர்களையும்
அச்சுறுத்துகிறார்
சட்டிக்குத் தப்பி நெருப்புள் விழுந்த
அந்த ஊரின் சந்தியில் நின்று
அழுகிறது வேப்பமரம்

நீதி செத்த அந்தப் பகலில்
போடியாரின் வெறுப்பைச் சுமந்தால்
தமிழ்ப் போராளிகளுக்கு தண்ணீர் தந்ததே
குற்றமாயச் சுமந்து
வெள்ளைச்சேலை முக்காடு இட்ட
துக்கமாயக் குந்தி
"அல்லாஹ்" என்று கண்ணீர் சிந்திய மரியத்துக்கு
நிழற்குடை பிடித்த அந்த வேப்பமரம்
டயரும் பிணமும் எரிகிற வாடையில்
காற்றே குமட்டி வாந்தி எடுத்த
அந்த இரவில் அழத்தொடங்கியதாம்



ஏன் அழுகிறாய் வேப்பமரமே
நீதி கேட்டாயா
அல்லது எங்கள் மரியம் ராத்தாவின்
தண்ணீர் குடித்து உப்பைத் தின்றவர்கள்
அவளது சடலம் எரிந்த ரயரில் நீட்டிக்கிடந்த சாம்பர்
கலைவதான் முன்னமே
பள்ளிவாசலில், தெருக்களில் இறங்கி
அவளது உற்றார் உறவினர் மீது
செய்நன்றி கொன்ற பாதகம் நினைந்தா?

1996

நன்றி -

**மீசான் கட்டைகளில் மீள எழும் பாடல்கள் / 26**

### 3.1.7 மனித வாஞ்சை வெளிப்பட்டு நிற்றல்

பாதணிகளைத் தைத்துப் பிழைக்கும் தமிழ் மகன் மீது தனது வருத்தத்தை வெளிப்படுத்தும் ரத்னஸ்ரீயின் கவிதையொன்று பலரது கவனத்தை ஈர்த்தது. சிறு பான்மையினரின் மேல் எப்போதும் வாஞ்சையுடன் பேனா பிடிக்கும் சிங்களக் கவிஞர்களில் முதன்மையானவர் அவர். என்றாலும், அழிவுகளை அன்றி ஆழச் சென்று அவற்றுக்கான காரணங்களை தேடவேண்டும் என கவிஞர்கள் மீது ஒரு வகைக் கட்டாயத்தைத் திணிப்பவர்களுக்கு இப்பண்பு ஒவ்வாமை உணர்வை தரலாம் அதை ஆய்வது நமது நோக்கமன்று.

காலையில் அவனது செடியில் பூப்பது
சுடும் சூரிய புஷ்பமே அன்றி
வேறில்லை
ராசய்யா அண்ணே!
இது உனக்கு சுப உதயமா ?

<u>இறுதித் தொடர்</u>

# இனப்பிரச்சினைச் சூழலில் வெளியான சிங்களக் கவிதைகள்

## சிறு கண்ணோட்டம்

---

**எம்.சீ.ரஸ்மின்**

என வினவும் ரத்னஸ்ரீ காலை உதயத்தைக் கொண்டு வரும் சூரியன் இயற்கையில் பல அமர்வுகளைத் தோற்றுவிக்கிறது. மனிதர்களிலும்தான் ஆனால் ராசையாவைப் பொறுத்த வரையில் அது சிறு வெப்பம். தினமும் காலையில் வந்து மறையும் வெப்பம். அவனுடைய காலைப் பொழுது உதயம் காண்பதே இல்லை. அதனால்தான் இது உனக்கு சுப உதயமா என்று கேட்கின்றார். முழு ஊருக்கும் சேவை செய்யும் ராசய்யாவிடம் பாதசாரிகள், பிள்ளைகள், நடந்து பழக்கப் படாதவர்கள் உயர் அதிகாரிகள் எல்லோரும் பழைய பாதணிகளை கொண்டு வருவர் ஆனால் அவன் கேட்டு யாரிடமும் பணம் வாங்குவதில்லை.

காணிக்கைப் பெட்டி[16] போல்
அல்லாத
சிறு சுண்டு வைத்திருப்பான்
ஆனால் காணிக்கைப் பெட்டியில் இடுவதுபோல்
விரும்பிய தொகை போடலாம்

என்றோ ஒரு நாள் அது நிறைந்தால்
அந்த மின் கம்பத்தின் கீழ்
சந்தோசச் சுவாசம்
பனித்தூறலாய் படியும்.

..................
ஆனந்த மேகம் சூழ்ந்து கொள்ளும்
அப்போது
ஊன்று கோள் அவனைப் பழிக்கும்
உலகம் சுற்றிக்கொண்டிருக்கிறதா?
அது பொய்
நீ இன்னும் அதே இடத்தில் தானே
இருக்கிறாய்'

என அக்கவிதை தொடரும். விடுதலை இயக்க மொன்று வெளியிட்ட சில கவிதைகள் (பாடல்களும் கூட) அவ்வியக்கத்தின் சித்தாந்தத்தை வெளிப் படுத்துவதாக இருந்தாலும், இனவுறவு பற்றி நேரான கருத்தாக்கங்களைக் கொண்டிருக்கிறது. நடந்தவற்றுக்கு மனம் வருந்தும் மனோ நிலையைப் பெரும்பான்மை சமூகத்தினை வெளிப்படுத்தும் கவிதையொன்றே "விமுக்தி கீ" (1979) எனும் நூலில் கண்டு கொள்ள முடிகிறது. ஜயத்திலக்க பண்டார, ரத்னஶ்ரீ இருவருடனான நேர்காணலின் போது அவர்களும் இக்கவிதையை சுட்டிக்காட்டினர்.

வேலு அண்ணே!
என்ன மன்னித்துவிடு
காவடியூர்வலம் நடந்த போது
உன்னை நான் திட்டினேன்
உழவு வண்டியில் நான் விழுந்து
உயிருடன் போராடிய போது
உன் உதிரத்தை தந்துதத்வினாய்
இன்று நான் என் குடும்பத்தையே
காத்து நிற்கிறேன்[18]

இக்காலத்தில் வெளிவந்த கவிதைகளுள் மிகச் சிலவே இங்கு கருத்திற்கொள்ளப்பட்டன. இவை தவிர சிங்கள மொழி, இனமுதன்மை வாதக் கருத்துகளை வெளிப்படுத்தி நிற்கும் எதிர் நிலைக்கவிதைகளும் அதிகளவில் உ_ள்ளன. அவற்றையும் ஆய்வுக்குட்படுத்துதல் முக்கியமானதாகும். ■

கடந்த ஐந்து ஆண்டுகளாக
அநுராதபுர மண்ணில் கலை, இலக்கிய நற்பணிபுரியும்
படிகள் இருமாத இலக்கிய இதழுக்கு
வாழ்த்துக்கள்

அநுராதபுரம் விவேகாநந்தா சபை

புறா கொத்திக் கிழித்துப் போன
புதிய நிலாவின்
நீண்ட துண்டொன்றினால்
அள்ளி ஊத்திய வெளிச்சத்தில்
வட்டமாயிருந்து நையாண்டி கதைத்த
ஒரு செப்பமான இரவு


ஐஸ் தண்ணீரில் தொண்டை நனைத்து
கனத்த கதைகள் கதைத்து
கடற்கரையைப்பொய்ப்படுத்தி
எங்களையெல்லாம் புதைத்துக்கொண்டிருந்தது
அன்றைய நிலாத்துண்டின் வெளிச்சம்

நண்பனின் மொபைல் அலறல்
இளமையை உண்மையாகவே
மிக அன்புடன் அள்ளிக்கொடுத்தது
துப்பரவான கடற்கரை மணல்
வேப்பங்காற்றின் குளிர்மையென்பன
உணர்வை சீண்டிக் கொண்டிருந்தன

இருட்டுமயமான தனிக் கல்லொன்றில்
நிர்வாணமான பெட்டைப் பூனை
வால் நக்கி, கை நக்கி பகிடியாக
விளையாடியது
அலைகள் மோதித்திரும்பும் வரை
எங்கள் கால்கள் மணலெங்கும்
புதைந்து விளையாடிக்கொண்டிருந்தது

மிக அழகிய நிலாத்துண்டின்
வெற்றிலை பாக்கு சப்பிய மூத்தம்மா
காறித்துப்பிய போதும்
கொஞ்சம் இருளான போதும்
அதே வேப்பங்காற்று
எங்கள் வாய்களிலும் கண்களிலும்
மண்ணள்ளிப்போட்டுச் சீறிப்பாய்ந்தது

மண்மலை, வேப்பங்காற்று, கபுறடி என்பன
ஊரின் உருவத்திற்குச் சொல்லப்படும்
மிகப் பெரிய அடையாளம்
ஆயிரமாயிரம் பாதங்கள் புதைந்தலும்
உயிர்கள் நாசமானாலும்
எங்களின் கணமான குறியீடு இது மாத்திரமே





**முஹம்மது றபீக்**
பொத்துவில்

# மண்மலையும் வேப்பமரமும்


ஒவ்வொரு காலப்பகுதியிலும் ஒவ்வொரு விதமான மையக் கருத்துக்களைப் பிரதிபலித்து கவிதைகள் மற்றுமல்லாது ஏனைய ஆக்க இலக்கியப் படைப்புகளும் வெளியாவது இயல்பே. மேலேத்தேய ஆக்கிரமிப்புக் காலப்பகுதியில் அவர்களது அடக்குமுறைகள் போன்றன உள்வாங்கப்பட்டன. பின் உலகமகா யுத்தம். உள்நாட்டு யுத்தங்கள் என நகர்ந்து உள்நாட்டு இடம் பெயர்வுகள். புலம்பெயர்வுகள் என நீடித்துச் செல்கிறது, மனித வாழ்வு. மனித அவலங்களை வெளிப்படுத்தும் மையக்கருக்கள் ஈழத்துத்தமிழ் பேசும் மக்கள் இல்லாத நாடே இல்லை எனும் அளவிற்கு ஊடகங்கள் வாயிலாக வெளிக்கொணரப்படும் ஆதாரங்கள் நிரூபிக்கின்றன. புலம்பெயர்ந்து வெளி நாடுகளில் வசித்தாலும் அவர்கள் யாவரும் தாய் நாட்டை மறந்த தேசப்பற்று அற்றவர்கள் ஆகிவிட முடியாது. நாட்டின் சூழ்நிலையே அவர்களை இடம் பெயரவைத்ததே தவிர, அவர்கள் மனதால் இடம் பெயரவில்லை என்பதை அவர்களது படைப்புகள் வெளிக்காட்டுகின்றன.

கனடா, அவுஸ்ரேலியா, பாரிஸ், ஜேர்மன் போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்தவர்கள் தங்களது இருப்பை அடையாளப்படுத்தி சஞ்சிகைகளும், நூல்களும் வெளியிட்டு தமது இலக்கியத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள எத்தனிப்பதை அறிகின்றோம். இந்த எத்தனிப்பின் வெளிப்பாடுதான் நமது இரசனைக்கு கிட்டியுள்ள காற்றை கானமாக்கிய புல்லாங்குழல் கவிதை நூலாகும். இது மல்லிகைப் பந்தல் வெளியீடுகளில் ஒன்று.

### இணுவை க.சக்திதாசனின்

# காற்றைக் கானமாக்கிய புல்லாங்குழல்

**இரசனைக்குறிப்பு**



**- அநுராதபுரம் ஸமான்**

இக்கவிதை நூற் பிரதியில் " ஒரு நிலப்பரப்பின் வரைபடங்களாக..." என்ற குறிப்புகளை மேமன்கவி தந்துள்ளர். இவ்விடயங்களை நோக்கினால், "இவர் வெறுமனே உள்ளடக்க வழியாக மட்டுமின்றி, அவ்விடயங்களை எடுத்துச் செல்லும் மொழியில் கணிசமான படைப்புக்களில் வடிவமைத்துத்தருவது முன் விரியும் நிலப்பரப்புடன் உணர்வு பூர்வமாக நம்மை கலந்து கொள்ளச் செய்கின்றன" இக்குறிப்புகள் இக்கவிஞனின் படைப்பின் தன்மை, அதன் பரப்பு, அது வேண்டி நிற்கும் உளவியல் வேட்கை என்பனவற்றை நிறுவி வெளிப்டுத்துகிறன.

இக்கவிதை நூலில் வண்ணை தெய்வம் (பாரிஸ்), வேலணையூர் பொன்னண்ணா (டென்மார்க்) ஆகியோர்களது அணிந்துரைகளும் அமையப் பெற்றுள்ளதுடன், மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவாவின் பதிப்புரையும் அவை தவிர மேலதிகமாக அமைந்துள்ளன.

*முகில்*

*போர்த்திய நிலவுக்குள்*

*ஒளிந்தொளிந்து...*
*நாடுவிட்டு*
*ஒருகையால்*
*உயிரைப்பிடித்தபடி...*
*மறுகையால்*
*சிறகு விரித்தபடி*
*அன்று தொலைத்த இரவுதான்*
*இன்னும் விடியவில்லை.*

தொலைத்த இரவு என்ற இவரது இக்கவிதை தனது சொந்த மண்ணில் இருந்து இடம் பெயர்ந்த கசப்பான அநுபவங்களை மெய்படச் சொல்கிறது. இக்கவிதையின் வரிகள் கவித்துவ வீச்சுடன் நம்முள் ஓர் உணர்வுபூர்வத்துவத்து அவாவி நிற்கிறன.

*<u>தலைவிதி</u>*
*கிராமத்துப் (பூ)*
*ஒன்று மாலையாகி மணத்தது ஏனோ*
*நகரத்து (சா) வீடொன்றில்தான்*
*..................................*
*மானத்தமிழினத்தின்*
*சாபக்கேடு...*
*தவறேதும் செய்யாமல்*
*சிறைவாடுவதே எங்கள்*
*தலைவிதியாகிவிட்டது.*

இக்கவிதைகளை வாசிக்கும் போது பயங்கரவாதச் சட்டத்தின் மூலம் இலங்கை அரசால் கைதாகி சிறை பிடிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களது வாழ்வை எமக்கு புடம் போடுகிறது. தமிழ் மக்களது இன்றைய இடப் பெயர்விற்கும், இன்னல்களுக்கும் ஏதுவான பின்னணி போர் ஆகும். தமிழ் சமூகத்தின் வாழ்வை தலைகீழாக்கிப்போட்டதும் இந்த போரும் அதன் கடூர விளைவுகளும் என்றாள் அது மிகையல்ல.

வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்து தமது இருப்பை அடையாளப் படுத்தி தமது கருத்துக்களை வெளியிடுவது தாம் புலம் பெயர் நாடுகளில் வாழும் போது அநுபவிக்கும் இன்னல்கள்தான் முதன்மையானதாக அமைவது என்பது குறிப்பிடத்தக்கது. இக்கவிதை நூல் திமிழ் கவிதை உலகில் சிறைப்பட்ட மக்களது குரலாக ஒளி / ஒலிக்கிறது. ■

அண்மையில் காலஞ் சென்ற
பத்திரிகையாளர், நவமணி அஸ்ஹர் அவர்களது
மறைவை எண்ணி படிகள் குழுவும்
அநுராதபுர மண்ணின் இரங்கள்களைத் தெரிவிக்கிறது.




அந்த சில நிமிடங்களில் ...
சுவாசித்தலுக்கான காற்று
எரிந்து போனது

உணர்ச்சிகளின் உந்துதலினால்
உடலின் உயிரணுக்கள்
ஒவ்வொன்றும் நிர்வாணமானது

எதுவுமே பேசமுடியாத
குற்றுயிரி நிலையில்
குருதி இயங்க மறுத்து
தடைப்பட்டுப்போனது

வாழ்தலின் வலியும்
பிரிதலின் தவிப்பும்
ஓர நேரத்தில்
உயிருக்குள்
ஊசலாடின ...


புன்னகைக்குள்
ஒரு புதை குழி
தோண்டப்பட்டிருந்தது
ஏகாந்த வெளியில்
என்னோடு நான்
உலாவவிடப்பட்டேன்

மனிதம் மரணித்துப்போன
ஓர் உலகில்
உணர்வுத்துளிகள்
ஒவ்வொன்றும்
ஒவ்வொன்றையும் புணர்ந்தன ...

கோடைகாலக்குளிரும்
குளிர்காலச் சூடும்
கட்டிப்போட்டு ஆசீர்வதிக்க
மகிழ்ச்சி தராத
மலட்டுக் கனவுகள்
என்னைத் துக்கிலிட்டன.

கல்லறைகளில்
கருவறைகளுக்குள்
தலை வேறு உடல் வேறு
கை வேறு கால் வேறாக
சிதறிக்கிடந்தன
சந்ததிகள்

பேருவளை றபீக் மொஹிடீன்



# யார் அந்த அபூபக்கர் ஹாஜியார்?

T. சற்குணராசா ஐயா





இற்றைக்கு கிட்டத்தட்ட இருபது அல்லது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம்.

அப்பொழுது நான் அட்டளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நூலகராக கடமையாற்றிக் கொண்டிருந்தேன்.

நானும் எனது மனைவியும் யாழ்ப்பாணத்தில் லீவில் நின்றிருந்தோம். நான் மீண்டும் லீவு முடிந்து வேலைக்குத் திரும்பவேண்டிய உரிய காலம் மலர்ந்துவிட்டது. நான் வேலைக்குப் போகப்போகிறேன் என்று மனைவியிடம் சொன்னவுடன், என்னுடன் எனது மனைவியும் வருகிறேன் என்று புறப்பட்டுவிட்டாள். அவளுக்கு என்னைத் தனியே அனுப்பப் பயம். ஏனென்றால் அந்த வேளையில்த் தான் தமிழ் சிங்கள இனக்கலவரம் நடைபெற்று முடிந்து ஒரு கிழமையோ இரண்டு கிழமையோதான் இருக்கும். மழை விட்டும் துவானம் விடவில்லை என்ற நிலை. அதாவது 1983ம் ஆண்டு இனக்கலவரம் நடந்து முடிந்து இனச் சுத்திகரிப்பு, இனவன்மம் உயிர்த்திருந்த கடூர நிலை.

இவ்வாறான ஒரு நாளில்த் தான் நானும் மனைவியும் ஊரைவிட்டுப் புறப்பட்டோம். யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலையத்திற்கு வந்தோம். சில நிமிடங்களுக்கு முன் மட்டக்களப்பு பஸ் போய்விட்டது. கட்டாயம் நாளை நான் வேலைக்குச் சென்றாக வேண்டும் என்ற ஓர் தவிர்க்க முடியாத நிலை எனக்கு. இருந்தும் மனம் தயங்கவில்லை, நான். அநுராதபுர பஸ்ஸில் ஏறினோம். பிற்பகல் 2.00 மணியளவில் பஸ் அநுராதபுரத்தை அடைந்தது. அநுராத புரம் போன்ற சிங்கள மக்கள் செறிந்து வாழும் ஒரு பிரதேசத்தில் தமிழர்கள் ஊடாட்டம் செய்வது அப்போதைய இனக்கலவர சூழ்நிலையில் முடியாத ஒன்றாகும். எது எப்படியாயினும் நாம் உடனடியாக பொலனறுவை பஸ் எடுத்து 6.00 மணியளவில் கதுருவெல பஸ் நிலையத்தை அடைந்தோம்.

மட்டக்களப்பிற்கு இனி பஸ் இல்லை என்ற செய்தியை பஸ் தரிப்பிடத்தில் நின்றவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டோம். மனைவி சற்று பீதியிலே இருந்தாள் என்பது அவளது பிம்பத்தை வைத்து ஊகித்துக் கொண்டேன். இனப்பிரச்சினைக் காலம். சிங்கள மக்கள் அதிகமாக வாழும் பிரதேசத்தில் இரவு நேரத்தில் நிற்பது மிகவும் பயங்கரமானது என்பது நடைமுறை உண்மையாகும்.

இருவருக்கும் நல்ல பசி. பயணத்தின் மீதிருந்த இன்றியமையாத பற்றும், பயணத்தின் காரணமான அச்சமும் பசியை நீண்ட நேரம் மறைத்து முடக்கியிருந்தது.

ஒரு முஸ்லிம் ஹொட்டேல் இருந்தது. அங்கு போய் சோறு சாப்பிட்டோம். அங்கே எங்களுக்கு சோறு பரிமாறிய சிறுவன், கடையின் மேல்மாடியில் படுக்கலாம் என்றான். மனைவிக்கு அது சரியாகப்படவில்லை. அந்தக்கடை பூட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுக் கொண் டிருந்ததனால், கடையை விட்டு வெளியே வந்தோம். ஒரு சிங்களக் கடை திறந்திருந்தது. அக்கடையின் அருகில் நின்றோம். நாங்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் கடையைப் பூட்டிவிடுவோம் என்றார்கள்.

நிர்க்கதியான நிலை. என்ன செய்வதென்று தெரியாது அச்சத்தால் பீடிக்கப்பட்டிருந்தது மனது. அவ் வேளையில் ஒரு லொரி வந்து அக்கடை அருகில் நின்றது. ஒருவர் இறங்கினார். அவர் வெள்ளைச் சாரம், வெள்ளைச் சேட், வெள்ளைத் தொப்பி அணிந்திருந்தார்.

எங்களை நோக்கி வந்தார். எங்களைக் கூப்பிட்டார். எனக்கு வியப்பு கலந்த மகிழ்ச்சி முகிழ்ந்து மலர்ந்தது. எங்களைப் பார்த்தவுடன் அவருக்கு எமது நிர்க்கதி நிலை விளங்கிவிட்டது போலும். "எனது பெயர் அபூபக்கர் ஹாஜியார், நான் காத்தான்குடி" என்று தன்னை சாதுவாக அறிமுகப் படுத்தினார்.

பின்னர் பக்கத்தே செல்லும் வாய்க்காலை சுட்டிக்காட்டி "இதே வாய்க்காலுடன் ஒரு சிறிய தெரு உள்ளது, அத்தெருவில் சிறிது தூரம் நடந்து செல்லுங்கள் மாணிக்கம்பட்டி என்ற ஒரு பாடசாலை வரும், அது முஸ்லிம் பாடசாலை. அங்கே போய் எனது பெயரைச் சொல்லி பாடசாலை அதிபரை சந்திக்கவும். அவரும் காத்தான்குடிதான். அவர் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவார்..." என்றார்.

எனது பாரியார் என்னைச் சுட்டிச் சொன்னார் "நான் மொக்காடு போடுறன் என்றாள்" அவ்வாறே அவ மொக்காடு போட்டாள். இவ்வாறு அவள் செய்ததற்குக் காரணம் நாட்டில் நிலவிக்கொண்டிருந்த அசாதாரண சூழ்நிலையாகும். நாம் தமிழர்கள் என்பதனை இராணுவம் அல்லது இனவாதிகள் அறிந்தால், அது எமது

உயிருக்கு ஆபத்தா(க்)கிவிடும் என் பதாகும். அவளது தீர்க்க தரிசனத்தைக் கண்டு நெகிழ்ந்து போனேன், நான். இருவரும் நடந்தோம். பாடசாலையை அடைந்தோம்.

பாடசாலைத் தோட்டத் திற்குள்ளே போய் அதிபர் விடுதியின் கதவைத் தட்டினோம். ஒருவர் வந்தார். நான் உடனே "காத்தான் குடி அபூபக்கர் ஹாஜியார் எம்மை இங்கு அனுப்பினார். நான் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை நூலகர், இவ எனது மனைவி, நாம் யாழ்ப்பாணத்திலிருந்து வந்துள்ளோம். மட்டக்களப்பிற்கு பஸ்கிடைக்கவில்லை, அதுதான்..." என்றேன். அவர் உடனே உள்ளே அழைத்து இருக்கச் சொல்லி சாப்பாடு என்ன மாதிரி என்று கேட்டார். நாங்கள் இப்பொழுதான் கடையில் சாப்பிட்டோம் என்று கூறினோம். தேனீர் ஏற்பாடு செய்து தந்தார்.

பின்னர் நாம் பல்வேறு விடயங்களை அளவளாவினோம். அப்போது அவர் "தான் 1961ம் ஆண்டுகளில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சி ஆசிரியராக இருந்தேன். அக்காலப்பகுதியில் நூலகர் பதவி ஒன்று இருக்க வில்லையே" என்று நினைவு கூர்ந்தார்.

அப்போது நான்: நான்தான் கலாசாலையின் முதன் முதலாவது நியமிக்கப்பட்ட நூலகர் என்றும் 1973ல் புதிய கட்டிடம் நூலகத்திற்காக கட்டி முடிக்கப்பட்டு அல்ஹாஜ் பதியுதீன் முகம்மது அவர்கள் அமைச்சராக இருந்தபோது நூலகத்தை திறந்து வைக்கும் வைபவத்திற்கு அவரை மாலை அணிவித்ததாகவும் குறிப் பிட்டேன். அக்காலப் பகுதியில் அங்கே உமர்தீன் என்பவர் அதிபராக இருந்தார் என்று கூறினேன். அவர், பழைய கதைகளை நினைவு படுத்தும் போது அதனை மகிழ்ச்சியுடன் கேட்டவண்ணம் இருந்தார்.

"நீங்கள் களைத்துப்போய் இருப்பீர்கள்" என்று குறிப்பிட்டு இராசரத்தினம் என்ற ஆசிரியரை கூப்பிட்டு, இவர்கள் தங்குவதற்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்கவும் என்று கூறினார். நாங்களும் அதிபருக்கு நன்றி சொல்லிவிட்டு அவரிடமிருந்து விடைபெற்றோம்.

இராசரத்தினம் ஆசிரியரைப் பின்தொடர்ந்து சென்றோம். அவர் எமக்கு தங்குவதற்கு அறை ஒன்றை ஏற்பாடு செய்து தந்தார். அங்கு தங்கினோம். விடியற் காலை இராசரத்தினம் ஆசிரியர் வந்தார். (இவர் தான் களுவாஞ்சிக்கொடி என்ற ஊர் என்று சொன்னதாக ஞாபகம்) ஆசிரியர் வரும் போது தேனிருடன் வந்தார். அப்பொழுது நாங்கள் புறப்படத் தயாராக இருந் தோம். ஆசிரியர் இராசரத்தினத்திடமும் அதிபரிடமும் நன்றிகளைச் சொல்லி மகிழ்ச்சியுடன் விடைபெற்றோம்.

பிரதான வீதிக்கு வந்து மட்டக்களப்பு பஸ்ஸில் ஏறி, அக்கரைப் பற்று வந்து சேர்ந்தோம்.

அந்த அபூபக்கர் ஹாஜியார்? யார்? அவரை அனுப்பியது யார்....? என்ற கேள்விகள் எனது மனதை போட்டுக் குடைந்து கொண்டிருந்தன. நாம் மிகவும் நிர்க்கதியான சூழலில் நின்றதனை இவருக்கு சொல்லியது யார்? என்ற கேள்விகள் என்னை வியப்பில் ஆழ்த்தியது.

ஆனால் கலாசாலையில் காத்தான்குடியைச் சேர்ந்த மாணவ மாணவிகள் பலர் பயிற்சியில் இருக்கிறார்கள். ஒரு மாணவயிடம் சம்பவம் பற்றிக் கூறினேன். அப்போது அந்த மாணவி, அபூபக்கர் ஹாஜியார் தனது மாமா என்றார். எனக்கு சொல்ல முடியாத சந்தோஷம். அவருக்கு ஸலாம் சொன்னதாக குறிப்பிட்டதுடன் நன்றியும் தெரிவித்தேன். இருந்தும் மனது தணிய வில்லை. ■

# காற்றின் நினைவேட்டில் காதல் நினைவுகள்

காற்றுச் சொல்ல மறந்த கதைகளை
இப்பொழுது
மலர்கள் மருவிச் சொல்கின்றன

என் நிலமையை
விளங்கிக் கொள்ளும்
காற்றுக்கு இப்போது
கவிதைகளையன்றி
வார்த்தைகளைச்
சொல்ல முடிவதில்லை

காற்றிடம் சரணடைந்தேன்


பிரார்த்தனையால் உருவான
யதார்த்தங்கள்
என்னுள் சகாப்தங்களாய்
மாறிவிட்டன

காற்றுக் கொண்டு சென்று
கடலலைக்குக் கொடுத்த
விண்ணப்பத்தை
கசக்கி எறிகிறது ...
அலைகள்

தோல்விகளை புதிராக நான் புரிந்து
புத்திமையிழந்து புதிர்த்தேடுகிறேன்
காற்று வெளியெங்கும்
கவிதை முகம் கொண்டு
என் காதலின் கண்ணீர்ச்
செண்டுகளுடன்...

உனக்கான கவிதை நீ நேசிக்கும்
காற்றிடமும் மலர்களிடமும்
பாதுகாப்பாக இருக்கின்றன.

ஆனால் எனக்கானவை
என்னிடம் இல்லை ....



அநுராதபுரம் அஸ்ரார்

சமூக அவலங்களின் பிரதி



# ஓர் அபலையின் டயரி

எம்.சீ. நஜிமுதீன்

பெண் எழுத்தாளர்கள் நல்ல காத்திரமான படைப்புகளைத் தந்தாலும் காலப்போக்கில் அவர்களின் அனேகர் கலை, இலக்கியப் பரப்பிலிருந்து ஒதுங்கிவிடுகிறார்கள். சிலர் ஒதுக்கப்படுகிறார்கள். மண வாழ்க்கைக்கையின் பின்னரான பெண் படைப்பாளிகளின் கலை, இலக்கிய நிரோட்டம் சூன்யமாகவே அமைந்து விடுகின்றது. எனினும் சிலர் விதிவிலக்காக இந்த மரபில் எதிர் நீச்சலிட்டு வெற்றி பெறுகின்றனர். இது ஒரு தனிமனித வெற்றியல்ல. பெண்களது கல்வி, சமூக, பொருளாதாரம் உள்ளிட்ட அவர்களது அனைத்துத்துறை ஈடுபாடுகளின் வெற்றியாகும் என்பதே உண்மை.

இந்த அடிப்படையில் நீண்ட இலக்கிய வாழ்வில் நீண்ட அநுபவத்தின் பேராக ஜரீனா முஸ்தபா அவர்கள் தனது கன்னி நாவலைத் தந்துள்ளார்கள். அது "ஒரு அபலையின் டயரி" என்பதாகும். சமூக சீர்திருத்த நடவடிக்கைகளிலிருந்து விடுபட்டு தானும் தன்பாடும் என்ற கணக்கில் காலம் தள்ளும் இன்றைய சாதாரண உலகில். இதுபோன்ற சமூக நாவல்கள் ஊடாக சமூகம் மீதான அபார நேசத்தை இவரது எழுத்துக்கள் துலாம்பரமிடுகிறன.

எக்மி பதிப்பகத்தின் வெளியீடாக வந்துள்ள ஓர் அபலையின் டயரி நாவலானது, 2003/2004 காலப்பகுதியில் மித்திரன் வாரமலரில் 38 வாரங்களாக தொடராக வெளிவந்த ஓர் நாவலாகும்.

ஜரீனா முஸ்தபாவின் இற்றைவரையான இலக்கியப் பயணத்தின் முக்கிய அறுவடையாகவும், ஒரு மைற்கல்லாகவும் இந்நாவலின் வருகை மூலம் இவர் (தனது படைப்பின் மூலம்) நிலை நிறுத்தப்படுகிறார். இதனால் தனது கதைகளில், அநுபவத்தின் ஆழ அகலங்கள் பளிச்சிடுகின்றன. கதைக்கருவில் குறிப்பிடப்பட்டுள்ள சூழ் நிலைகள் சமூகத்தின் யதார்த்த நிகழ்வுகளை எமக்குத் தருகின்றன. இவ்வாறான அசாதாரண நிகழ்வுகள் நமது சமூகத்தின் இருப்பில் விடுபட்டு அறவேண்டும் என்பதே கதையாசிரியரின் செய்தியாக துலங்குகிறது.

இளம் பருவத்தினர் தமது வாழ்வில் உணர்ச்சி நெகிழ்ச்சிகளுக்கு இசைவடைந்து தமது கண்ணுக்கெட்டிய அனைத்தும் சரியென்ற மமதையில் தமது நடவடிக்கைகளை அமைத்துக்கொள்வதனை இக்கதையின் ஒவ்வொரு முக்கிய கட்டமும் உணர்த்தி நிற்கின்றன. குறிப்பாக இஸ்லாம் ஒரு சமூக ஒழுக்க விழுமியங்கள் கொண்ட மார்க்கம் என்ற உண்மையினை நடைமுறை உலகுக்கு மீள நீட்டி மீட்டிப் பார்க்கிறது, இந்நாவல்.

இந்நாவலின் தொடக்கம் மயிர் சிலிர்க்கச் செய்யும் திகில் சம்பவங்களுடே ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு வசனமும் எதிர்பாராத திடுக்கிடும் அச்சத்தை ஏற்படுத்துகின்றது. துப்பறிவதில் ஆரம்பித்து சமூகப் பிரச்சினைகளை நன்கு திரையிட்டுச் செல்கின்றது. குடும்ப வாழ்வின் யதார்த்தப் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதுடன், கணவன் - மனைவி வாழ்க்கை வேறுபாடுகள், வேலை நிமித்தத்தால் அவஸ்தைப்படும் குடும்பம், நண்பர்களுக்கிடையிலான வரையறைகள், அத்னை மீறும் போது ஏற்படும் சீர் குலைவுகள், உளத் தாக்கங்கள், சந்தேகங்கள் போன்ற சமூக பிரச்சினைகளின் ஒட்டு மொத்த வெளிப்பாடாக இந்நாவல் அமைகிறது. இவ்வாறு பல்வேறு சமூகப் பிரச்சினைகளை கோடிட்டு காட்டிய நாவலாசிரயர், தற்போது எல்லாத் தரப்பாளும் பாவித்து பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ள (கைத்)தொலைபேசிகள் பற்றி பேசியிருப்பின் அது இன்னும் வலுவான செய்தியாக இருக்கும்.

நாவலின் சுவையான ஓட்டத்திற்கு நாவலாசிரியை கையாண்டுள்ள மொழியும், கருத்துக்களும் சிறப்பாக பங்களிக்கின்றன. இதனை கருத்துரையில் மௌலான அவர்களும் குறிப்பிட்டுள்ளார். ஒரு மனைவி தனது கணவனின் அன்பிலிருந்து எத்தனை குழந்தைகளுக்கும் இடம் கொடுப்பாள், ஆனால் இன்னுமொரு மனைவிக்கு இடம் கொடுக்க மாட்டாள் என்பது மேற்சொன்ன குறிப்பை நிரப்புகின்றது.

ஜரீனா முஸதபா அவர்கள் இந்நாவலை இஸ்லாமிய வாழ்க்கை வழிமுறையில் படைத்துள்ளார். பாத்திர வார்ப்புக்கள், சூழ்நிலைகள், கருத்துக்கள், சட்டங்கள் போன்றன அத்தனையும் இஸ்லாமிய சித்தாந்த அடிப்படையில் படைக்கப் பட்டுள்ளமையானது, ஏனைய சமூகத்தவர்கள் இந்நாவலை படிப்பதன் மூலம் இஸ்லாத்தை விளங்கிக் கொள்ள ஏதுவாகிறது. பாத்திர உரையாடலில் சாதாரண (பேச்சு) மொழி வழக்கும், எழுத்து வழக்கும் இரண்டரக் கலந்து கோர்க்கப்பட்டுள்ளன. இது தவிர பிரதேச மொழி வழக்கு தனியே கையாளப்பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

இந்நாவலின் எழுத்துரு, அச்சமைவு என்பன குறிப்பிடத்தக்க அளவு சிறப்பாக அமைந்துள்ளன. தவிரவும் அட்டைப்படம் இயற்கை நிரம்பிய காட்சி ஒன்றின் பிம்பமாக ஒளிர்கிறது. எனவே இந்நாவலின் மூலம் ஜரீனா முஸ்தபா அவர்கள் தனக்கான ஒரு இலக்கிய அடையாளத்தை கட்டமைத்துவிடுகிறார் என்பது மகிழ்சியானதும், வாழ்த்துக்குரியதுமான ஒன்று. இந்நாவலுக்கு வாழ்த்துரை வழங்கியுள்ள பதியத்தலாவ பரூக் அவர்களது வாழ்த்தைப் போன்று நாமும் வாழ்த்துகிறோம். உங்கள் எழுத்துப் பணி தொடர வாழ்த்துக்கள்.


*The Best Wisher to*

அநுராதபுர மண்ணின் கல்வி வளர்ச்சி
செயற்பாட்டாளர்களுக்கு வாழ்த்துக்கள்

FAME
Foundation of Anuradhapura
MUSLIM EDUCATION

# பூர்வீகம் நோக்கிய பிரக்ஞையும்

# மஹ்மூட் தர்வீஷ் கவிதை உலகும்




- இப்னு ஆயிஷா

அண்மையில் காலமான (2008.08.09) புகழ்பெற்ற பலஸ்தீனக் கவிஞர் மஹ்மூட் தர்வீஷ் அவர்களின் கவிதா வாழ்வு பற்றிய ஓர் மீள் வாசிப்பை இக்குறிப்புகள் வேண்டிநிற்கின்றன.

"நான் வாழும் வரை
என் சொற்களும்
சுதந்திரப் போராளிகளின்
கைகளில்
ரோட்டியும் ஆயுதமாய்
என்றும் இருக்கும்"

**"பலஸ்தீனம் மீதான காதலும், அதனை இழந்த துயரும் இவரது பெரும்பாலன கவிதைகளின் பாடுபொருளாக உள்ளன. பலஸ்தீன விடுதலைப் போராட்டத்தின் பிரசாரகனாக, பேனாவும் மையும் கொண்டு போரிடும் ஒரு போராளியாகவே பலர் இவரைக் கருதுகின்றனர்..."**

- கலாநிதி எம்.ஏ. நுஃமான்


மஹ்மூட் தர்வீஷ்

ஒரு தனி மனித சக்தியின் முழு வீச்சும் எத்துனை பாரதூரமானது என்பதற்கு சான்றாக நிற்பவர், கவிஞர் மஹ்மூட் தர்வீஷ். இஸ்ரேலிய அரச ஆக்கிரமிப்பின் மூலம் தனது மக்களது வாழ்வு இழக்கப்படுவது குறித்துப் போராடிய வரலாற்று மனிதர், இவர். தனது ஆரம்ப வாழ்விலே இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்காரர்களால் தலைமறைவுக்கு உட்பட்டார். இக்கால கட்டத்திலிருந்தே இவரது வாழ்வில் புரட்சிகர சிந்தனை கிளர்ந்தது என நாம் கணக்கிடலாம்.

கவிஞர் மஹ்மூட் தர்வீஷ் தனது பேனாவின் சக்தியால் பலஸ்தீன ஆக்கிரமிப்பின் மீது எதிர்த்துப் போராடிய வீரராக கணிக்கப்பட்டார். மிக இளம் வயதிலே அவர் கண்முன் நிகழ்ந்த பலஸ்தீனத் துயர நிகழ்வுகளை எதிர்க்கும் வலுவை தனது பேனா முனையால் வாத்தெடுத்தார். தர்வீஷ் அவர்களது கவிதைகள் சாதாரண ஒரு அடையாளமாகவன்றி அது ஒரு சமூகத்தின் அல்லது பூர்வீக மண்ணுக்கான போராட்ட மக்களது உணர்வுகளுக்கு அத்திவாரமாக முகிழ்ந்தன.

இஸ்ரேலிய அரச ஆக்கிரமிப்பாளர்களை இவரது கவிதை வரிகள் கதிகலங்க வைத்தன. அது மட்டுமின்றி நாளுக்கு நாள் இஸ்ரேலியப் படைகள் அஞ்சித்திரும்பும் மகா சிந்தனைப் பிரளயமாக இவரது கவிதை விச்சுக்கள் அமைந்தன. பலஸ்தீன மக்களது பூர்வீகம், இருப்பு, சுதந்திரம் போன்றனவற்றின் குறியீட்டு அடையாளமாக இவரது கவிதைகள் சவால்விட்டன.

மஹ்மூட் தர்வீஷ் அவர்களின் பத்தொன்பதாவது வயதில் இவரது முதலாவது கவிதைத் தொகுதியாக "சிறகிழந்த பறவைகள்" வெளிவந்தது. அதனைத்தொடர்ந்து பல்வேறு கவிதைப் பிரதிகள் அறபு உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் வெளிவந்திருக்கின்றன. அவற்றில் "ஒலிவ் இலைகள், பலஸ்தீனக் காதலன், இரவின் முடிவு, கலிலீயில் பறவைகள் மடிகின்றன, நான் உன்னை நேசிக்கிறேன் - நான் உன்னை நேசிக்க வில்லை, திருமணங்கள், மனித மாமிசத்தின் இசை, ஏழாவது முயற்சி, மண்ணும் ஏனைய கவிதைகளும், நீ செய்ததற்கு மன்னிப்புக்கேளாதே" என்பன குறிப்பிடத்தக்கன. இன்று தர்வீஷ் அவரது கவிதைகள் அகிலம் முழுவதும் வாசிக்கப்படத்தக்க வகையில் உலகில் உள்ள பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

தர்வீஷ் அவரது இக்கவிதைப் புரட்சியின் பயனாக இவரை இன்று உலகே வியந்து நோக்கிவருகிறது. இவரது கவிதை வல்லமையை நேசித்து ஆசிய ஆபிரிக்க எழுத்தாளர் ஒன்றியம் தாமரை விருதும், சோவியத் யூனியன் லெனின் விருதும், பிரான்ஸ் தனது அரசின் அதி உயர் விருதும் வழங்கி கௌரவங்களைத் தமக்காகப் பெற்றுக் கொண்டன.

கவிஞர் தர்வீஷ் பலஸ்தீன மக்கள் விடுதலை இயக்கத்தின் செயற்பாடுகளில் (மிகவும்) அதி தீவிரமாக இணைந்து செயற்பட்டார். பலஸ்தீன தேசத்தின் சுதந்திரப்பிரகடணத்தை வரைந்தார். இவர் பலஸ்தீன ஆய்வு மையத்தின் நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும், இயக்குனராகவும் செயலாற்றியுள்ளார்.

இஸ்ரேலிய அரச ஆக்கிரமிப்புச் சக்திக்கு நேர் எதிராக தொடர்ந்து போராடியவராக இருப்பினும், இவர் மனித நேயமிக்கவர் என்பதை இவரது வாழ்வில் நடந்த சம்பவங்கள் பறை சாற்றுகின்றன. அரசியல் ரீதியாக பல்வேறு ஓரங்கட்டல்களால் கருத்துப் பிரள்வுகளுக்கு உட்பட்டு ஏமாற்றப் பட்டுள்ளார். இருப்பினும் இன்னும் மீட்கப்படாத பலஸ்தீன மண்ணில் இவரது கவிதைகள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கிறது. அம்மக்களை பூர்வீக பிரக்ஞைக்கு நாளாந்தம் சிந்திக்க வழி சமைக்கிறது. இதனால் பலஸ்தீன தேசத்தின் தேசிய (கவி) வீரராக மக்களால் மதிக்கப் படுகிறார், கௌரவிக்கப்படுகிறார்.

"நாட்டப்பட்ட எனது புண்ணுக்கு
ஆறுதலாக
எனது களைத்த
வார்த்தையைத்தருகிறேன்"

"கண்ணீரை, சோகத்தை
கஷ்டங்களை விடப் பெரியது
காயம்"

இக்கவி வரிகள் தனது மண்ணின் காயத்தை பேசுகிறது. பலஸ்தீன மக்களின் ஆறாத்துயரத்தை வாஞ்சையுடன் அவாவி நிற்கின்றன, கவிஞர் மஹ்மூத் தர்வீஷின் கவிவரிகள்.

<u>வாக்குமூலம்</u>

"எழுதிக்கொள் இதனை
நான் ஓர் அராபியன்
தொழிலாளர்களுடன் கற்களை
உடைக்கிறேன்
கற்பாறைகளைக் கசக்கிப் பிழிகிறேன்
எனது எட்டுக்குழந்தைகளும்
ரொட்டித்துண்டினைப் பெறுவதற்காக
புத்தகம் ஒன்றைப் பெறுவதற்காக...

ஆயினும்
கருணை கேட்டு
நான் இரந்திட மாட்டேன்
என் அதிகாரத்தின்
ஆளுகையின் கீழ்
முழந்தாள் இட்டு
நான் பணிந்திட மாட்டேன்
கோபமா உனக்கு ?"

இக்கவி வரிகளை நோக்குவோமாயின் இவை பலஸ்தீன தேசத்தினதும் போராட்டத்தினதும் அடையாளமாகவே அமைந்துள்ளன. போராட்டத்தின் வலிமையை உணர்த்தி நிற்கின்றன.

நான் பிரகடனம் செய்கிறேன். என்ற கவிதையினை நோக்குவோமாயின் அவை பின்வரும் போராட்ட குறியீடுகளை சுட்டுகின்றன. "எனது நாட்டில் ஒரு சாண் நிலம் எஞ்சியிருக்கும் வரை/ என்னிடம் ஒரு ஒலிவ் மரம் எஞ்சியிருக்கும் வரை/ ஒரு எலுமிச்சை மரம்/ ஒரு கிணறு/ ஒரு சப்பாத்திக் கள்ளி எஞ்சியிருக்கும் வரை/ ஒரு சிறு நினைவு/ ஒரு சிறு நூலகம்/ ஒரு பாட்டனின் புகைப்படம்/ ஒரு சுவர் எஞ்சியிருக்கும் வரை..."

<u>கடைசி வானத்திற்குப் பின்...</u>

"இந்த மண் எங்களைச்
சுரண்டி எடுக்கிறது
கடைசிக்குறுகளான பாதையில்
முன்னேறிச் செல்ல
எங்களை நெருக்குகிறது..."

என்ற கவிதையின் அடிகளை பின் வாசிப்புச் செய்யும் போது பலஸ்தீன போராட்டத்தின் உச்சம் எமக்கு வெகு துலாம்பரமாக துலக்கப்படுகிறது.

அடுத்து எதிர்ப்பு என்ற இவரது கவிதையின் அடிகளை நோக்கினாலும் போராட்டத்தின் உச்சம் தெரிவதுடன் தனது பூர்வீக மண்ணை மீட்பதற்கான யாத்திரையின் பிம்பங்களை எமது கண்முன் நிறுவுகிறது.



"நீ என்னைச் சுற்றிக்கட்டலாம்
வாசிப்பதற்கும் புகைப்பதற்கும்
நீ தடைவிதிக்கலாம்
எனது வாயில் நீ
மண் இட்டு நிரப்பலாம்
எனினும் என்ன?" என்று வீரக் கேள்வியை எழுப்பகிறார்.

இவ்வாறு குறிப்பிடத்தக்க பல்வேறு கவிதைகளை இவர் ஆக்கியுள்ளார். தர்வீஷின் கவிதைகளில் அவரது மண் மீதான அபார வேட்கை புணர்ந்திருந்தது. நாளைய உலகு தமது வரலாற்றை தட்டும் போது, வரலாற்றில் இவர் வாழ்வார் இது சர்வ நிச்சயம்.

*16.08.2008*ம் நாள் சனிக்கிழமை பௌர்ணமி தினத்திலும், 17.08.2008ம் நாள் ஞாயிற்றுக்கிழமையும் மணிமேகலைப்பிரசுரத்தின் இலங்கை, இந்திய எழுத்தாளர்களின் 60 நூல்கள் வெளியீட்டு விழாவும், மாபெரும் புத்தகக் கண்காட்சியும் நடைபெற்றது. இதில் கலந்து கொள்வதற்கான மாபெரும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது. அதாவது இற்றைவரை புத்தக வெளியீடுகள் என்கையில் ஒரே மேடையில் ஒன்று அல்லது அதிகபட்சம் மூன்று நூல்களின் வெளியீட்டு விழாக்களே அதிகமாக நடைபெறும். ஆனால் இவ்வாறு ஒரே மேடையில் 60 நூல்களின் வெளியீட்டு விழா (நான்கு அமர்வுகளில் - காலையும், மாலையும்) கலந்துகொண்டது இதுவே முதற் தடைவ.

இந்நிகழ்வில் 54 ஈழத்து எழுத்தாளாகளினதும் 6 தமிழக எழுத்தாளர்களினதும் நூல்களை மணிமேகலை பிரசுர வெளியீடாக வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ் நாட்டைச் சேர்ந்த பெரியார்தாசன் (கருத்தம்மா), கவிதாசன், மற்றும் புரவலர் ஹாசிம் உமர், கலைச் செல்வன், முத்தைய்யா ஜெகன் மோகன், மற்றும் வெளியீட்டாளர்கள், கலைஞர்கள், இலக்கிய ஆர்வலர்கள் போன்ற பல்துறை இரசனையாளர்கள் நிகழ்வில் கலந்து மெருகூட்டினர்.

இத்தனை மாபெரும் வெளியீட்டையும், புத்தகக் கண்காட்சியையும் ஏற்பாடு செய்திருந்த தமிழக கற்கண்டு சிற்றிதழின் ஆசிரியர் ரவி தமிழ்வாணன் அவர்களது உழைப்பு மெச்சத் தகும். இங்கு நிகழ்ச்சிகளை ஒருங்கிணைப்பதற்கு சனிக்கிழமை அன்று, முன்னால் சூரியன் எப்.எம் அறிவிப்பாளர் சங்கீதா பாக்கியராஜாவும் ஞாயிற்றுக் கிழமைக்காக நானும் அழைக்கப்பட்டிருந்தோம். இவ்வாறான ஒரு மாபெரும் வெளியீட்டு நிகழ்வொன்றை ஒருங்கிணைக்க கிட்டியமை மகிழ்ச்சியான ஒன்றென்று இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன். மேலும் பெரியார்தாசன், கவிதாசன், ஹாஷிம் உமர், ரவி தமிழ்வாணன் மற்றும் பலர் என் அறிவிப்புப் பாணியை பாராட்டிமை எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட நூல்களின் உள்ளடக்கங்களை நோக்குவோமாயின் கவிதை, சிறுகதை, கட்டுரை, மருத்துவம், வரலாறு, இலக்கிய ஆய்வு, சிறுவர் இலக்கியம், பெண்ணியம், ஆன்மீகம், மொழிபெயர்ப்பு, கலைக் கலாசாரம், வானவியல், ஒப்பீடு... என்று பட்டியல் நீண்டவண்ணமுள்ளது.



## 60 நூல்களின் வெளியீட்டு விழா

### இலக்கிய நிகழ்வுத்தடம்

- லரீபா அபூபக்கர்
இக்கிரிகொள்ளாவ

இந்நிகழ்வில் வெளியிடப்பட்ட நூல்களுள் ஏதிலிகள் சிறுகதை நூலை முதலில் விரும்பிப்படிக்க முடிந்தது. ஏதிலிகள் என்பது ஏதுமில்லாது அகதிகளாய் வந்தவர்கள் பற்றிப் பேசுகிறது. இந்நிகழ்வில் சிறப்பித்துக் கூறவேண்டிய ஒரு விடயம் உண்டு. அதாவது, புரவலர் ஹாசிம் உமர் அவர்கள் தன்கைப்பட அதிகவிலை என்று தலைப்பிட்டு, அப்பா வாங்கித்தந்த மாப்பிள்ளை என்ற உணர்வுபூர்வமான கவிதை ஒன்றை உணர்வுப்பூக்கள் என்ற கவிதை நூலின் முன்பகுதியில் எழுதித் தந்தது எனக்கு மிக்க அதிசயிக்கத்தக்க மகிழ்ச்சியாக இருந்தது. அத்துடன் மிக அற்புதமான கருத்துக்களைக் கொண்ட கவிதாசன் அவர்கள் அவரே எழுதிய “நினைத்ததெல்லாம் வெற்றி” என்ற நூலில் வெற்றி உறுதி என்று எனக்காக எழுதிப் பரிசளித்தார்.


விழாவானது சிறப்புடனும் வெற்றியுடனும் இருந்ததனை மணிமேகலைப் பிரசுர நிர்வாக இயக்குணர் அவர்களது கருத்துக்களிலும் புன்னகையிலும் வெள்ளிடையாகத் தெரிந்தது. ■

## போர் பற்றிய ஒன்பது குறிப்புகள்

கூட்டமாக காகம் வந்து தின்றே முடித்த மனிதப்பிணம் - 01

அலகுகளாலும், கால்களாலும், நகங்களாலும்
பிய்த்துத் தின்ற போது சிந்திக்கிடக்கும்
சிறு சிறு சதைத்துண்டுகள் - 02

காகங்களாலும் வறாண்ட முடியாமல்
தின்றதும் தின்னாததுமாய்
காய்ந்து சுருங்கிய பச்சை மாறாத
சதைகள் ஒட்டிக்கொண்டிருக்கும்
எலும்புக் கூடுகள் - 03



இரைச்சலுடன் ஏவு பார்த்தவாறும்
மண்டைக்குள் புகுந்து
மூளையை மெய்த்துக் கொண்டிருக்கும்
கொசு விமானங்கள் - 04

சித்திரப் பூச்சிகளின் ஊர்தல் பயணத்தில்
கனவு கலைக்கப்பட்டதுவாய்
திசை தெறித்து அலைந்து திரியும்
திகிலூட்டும் திரிச்சல் -05

எங்கு திரும்பினாலும் கெட்டுப்போன வாசனைகள் - 06

ஒடிக் காய்ந்து கறுத்துப் போன இரத்தப்பாய்கள் - 07

ஓர் கபன் புடவையின் அமைதி - 08

சிதறிக்கிடக்கும் கனவுகள், நினைப்புகள்,
எண்ணங்கள் மற்றும் - 09 குறிப்புகள்

துறையூரான் அஸாறுதீன்

# எண்ணங்கள் எழுதிக்கொள்வது:

தாங்கள் அனுப்பிய படிகள் இதழ் கிடைத்தது. அதில் எனது கதை பிரசுரமாகியிருந்தது கண்டு மனம் மகிழ்ந்தேன். இதற்கு எனது உளமார்ந்த நன்றிகள். இதற்கு முன்னைய இதழ்கள் கிடைக்கவில்லை. பூபாலசிங்கம் புத்தகசாலையில் கேட்டும் பெறமுடியவில்லை. முடியுமானால் பழைய இதழ்களை அனுப்ப ஆவன செய்க. எனது சந்தவை இத்துடன் அனுப்புகிறேன்.

**ஆனந்தி**
தெஹிவளை

படிகள் 18 (ஐந்தாவது ஆண்டு இதழ்), அதற்குப் பிறகு வந்த 19வது இதழும் கிடைத்தன. அனுப்பிவைத்தமைக்கு நன்றி. படிகளின் அமைப்பு, உள்ளடக்கம் என்பன கனதியைக் காட்டி நிற்கின்றன. வாழ்த்துக்கள்.

பத்தொன்பதாவது இதழில் உள்ள கதைகள், கவிதைகள், கட்டுரைகள் சிறப்பானதாகத் தென்பட்டன. இதழில் பன்முகத்தன்மை இழையோடி நிற்கிறது. அபூ நுஹா, நஜிமுதீன் ஆகியோர்களது கதைகள் வேறுபட்ட குறியீடுகளைத் தருகின்றன. இருப்பினும் கதைகளின் உள்ளடக்கம் அல்லது அமைப்பு முறைமை இன்னும் வளர்ச்சியடைய வில்லை. சிறுகதைகளின் தன்மைகளை நுட்பமாக அவதானிக்கும் போது அது மாற்றமடையும்.

எம்.சி. ரஸ்மின் சிங்களக் கவிதைகளின் இனத்துவ பிரயோகங்கள் பற்றி மிகவும் சிறப்பாக ஆய்வு செய்துள்ளார். அவரது மொழியாற்றல் இதில் வெளிப்படுகிறது. தௌபீக் மற்றும் றபீக் மொஹிடீன் ஆகியோர்களது கட்டுரைகள் குறிப்பிடத்தக்கன. இருந்தும் தௌபீக் நவீன சிறுகதைகளின் பன்மைத்துவத்தை வாசிக்க வில்லை என்பது அறியமுடிகிறது. நாச்சியாதீவு பர்வீன் தனது தேடலை இன்னும் விரித்திரிப்பின் சிறப்பாக இருக்கும். குறிப்பாக அநுராதபுர மாவட்டத்தின் தனித்துவத்தை றசீம் தனது ஆய்வுக்கட்டுரையில் காட்டுவது போல் பர்வீனும் காட்டியிருப்பின் திருப்திகரமானதாக இருக்கும். சமானின் கவிதை திருப்தி கரமானதாக இல்லை. ஏனைய கவிதைகள் ஓரளவு நன்றாக இருக்கின்றன. அவை மனித வாழ்வின் இன்றியமையாமையை பேசுகின்றன.

**பரீதா பேகம்**
அட்டாளைச்சேனை

வஸீம் அக்ரமின் மண்ணில் துழாவும் மனது கவிதை நூல் விமர்சனத்தை வாசிக்க கிட்டியமை மகிழ்ச்சியான விடயம். அந்நூலின் அமைப்பு மற்றும் உள்ளடக்கத்தை அறிய விரும்புகிறேன். தயவு கூர்ந்து அந்த நூலின் பிரதி ஒன்றை எனது முகவரிக்கு அனுப்பிவைக்கவும். நன்றி.

**இ. நித்தியானந்தன்**

# குப்பை மேட்டிலும்...

குப்பபை மேட்டைப் பார்த்தேன்
அங்கும்.........
என்னவள்தான்

அள்ளி வீசிய
பழுத்த பூவரசமிலை
மஞ்சள் பூசிய அவள் மேனி

ஆங்காங்கே தெறித்த
குண்டு மணிகள்
அவள் கண்ணின் மணிகள்


குப்பை மேட்டின் உச்சியில்
கிளிந்து கிடந்த
குடைத்துணி
அவளது கூந்தல்

குப்பைக்குள்
ஒழிந்து கிடக்கும்
கால் விரல்களாய்
கவிழ்ந்து கிடக்கும்
கச்சான் கோதுகள்

எறிந்த
பலூனின் வாய்ப்பகுதி
என்னவளின் உதடுகள்

அங்கே உடைந்து கிடந்த
கண்ணாடியைப் பார்த்தேன்
என் விம்பம்
அது
என்னவளின் இதயம்


மொத்தத்தில்
அவள்
ஒரு குப்பை




**கொற்றையூர் நிலாவாசன்**

www.kodukuvely.com


**விசேட விலைக் கழிவுடன்**
**ஆடை அணிகலன்களை பெறலாம்.**



# DRESS MART



**17, Market Place, Anuradhapura.**
**Tel - 025 2224313**

# THE NET HOUSE

**COMMUNICATION & NET CENTER**

Printing, Photo Copy
Internet & Stationary

Type Setting
தமிழ்~ சிங்களம் ~ ஆங்கிலம்

**KADA 12, ANURADHAPURA**

# NEW FASHIONTEX & TAILERS



*Modstyle Gents Tailors*
*& Specialist in Wedding Suits*

**ire for Wedding kits**

488/5, Maithiripala Senanayeka Mw,
Anuradhapura # 060 2251553




# SHARMILA'S TEX

All are Fashion

அனைவருக்குமான
ஆடைத்தெரிவுகளுக்கு





NEW BUSTAN,
ANURADHAPURA

FOREIGN EMPLOYMENT
&
AIR TICKETING AGENTS

# ARM TRAVELS

WE ALWAYS WITH YOU




வெளிநாட்டு வேலை வாய்ப்பு முகவர் நிலையம்

AL HAJ A.R.M THARIK JP (PROPRIETOR)

114/2A, MARKET SITE,
ANURADHAPURA, SRI LANKA.
TEL - 025 4580622 025 5614183 0773041689